# தேடி வந்த குயில்

## பாரதிதாசன்



நாரா நாச்சியப்பன்

# தேடி வந்த குயில்

## பாரதிதாசன்

நாரா நாச்சியப்பன்

அன்னை நாகம்மை பதிப்பகம்

2/141, கந்தசாமிநகர், பாலவாக்கம்

சென்னை-600 041

முதற்பதிப்பு : டிசம்பர் 1992
© நாரா நாச்சியப்பன்

**விலை ரூ. 10.00**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1. | ஆயிரம் விளக்குகளை ஏற்றிய திருவிளக்கு | 9 |
| 2. | கல்கி தலைமையில் கனல் வீசும் சொற்பொழிவு | 16 |
| 3. | ஆத்தங்குடியில் பாரதிதாசன் | 22 |
| 4. | அழகப்பா கல்லூரியில் | 40 |
| 5. | சென்னையில் பாரதிதாசன் | 44 |
| 6. | கவியரங்குகளில் பாரதிதாசன் | 49 |
| 7. | பாரதிதாசன் பரம்பரை | 60 |
| 8. | தேடிவந்த குயில் | 63 |
| 9. | அவர் எழுதாத வரிகள் | 74 |
| 10. | பாரதியும் பாரதிதாசனும் | 79 |


கவின்கலை அச்சகம்,
கந்தசாமிநகர், பாலவாக்கம்,
சென்னை-600 041.
தொலைபேசி : 41 71 41

# முன்னுரை

புகழ்பெற்ற பெரியவர்களோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தவர்கள் பெருமைக் குரியவர்கள் ஆகிறார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்ததை அறிகின்ற மக்கள், அப்படியா என்று வியப்புடன் நோக்குவார்கள்.

அந்தப் பெரிய மனிதரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லையே என்று எண்ணிக் கொண்டு, வாய்ப்புக் கிடைத்தவர்கள் நல்ல பேறு பெற்றவர்கள் என்று போற்றுவார்கள்.

என் நண்பர் ஒருவர் ஒரு நாள் எங்களிடையே பேசிக் கொண்டிருக்கும்போது "எனக்கு மகாத்மா காந்தியை நன்றாகத் தெரியும்"என்றார், உடனே நாங்கள், "அப்படியா? அவருடைய சத்தியாக்கிரகப் போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறீர்களா? சிறையில் அவரோடு இருக்கும் வாய்ப்புக் கிடைத்ததா? போலீஸ் தடியடிக்கு ஆட்பட்டதுண்டா?" என்றெல்லாம் ஆவலோடு கேட்டோம்.

"நான் என்ன சொன்னேன்? எனக்கு மகாத்மா காந்தியை நன்றாகத் தெரியும் என்று தானே சொன்னேன். அவர் பேசிய கூட்டங்களுக்குப் பல முறை சென்றிருக்கிறேன், அவருடைய வரலாற்றை நன்றாகப் படித்திருக்கிறேன். அதனால் அவரைப்பற்றி எனக்கு நன்றாக— மிக நன்றாகத் தெரியும் ஆனால் அவருக்கு என்னைப்பற்றித் தெரியாது" என்றார்.

வேடிக்கைக்காக அவர் இப்படிச் சொல்லியிருந்தாலும், பெரியவர்களைப்பற்றி அறிந்திருப்பதே பெருமைதான்.

பாரதியாரோடு நெருங்கிப் பழகியவராகவும், பாரதியாருக்கு இணைவைத்துப் பேசக்கூடிய சிறப்புடையவராகவும், முப்பெரும் திராவிடத் தலைவர்களில் ஒருவராகவும் சிறந்து விளங்கிய புரட்சிக் கவிஞரோடு நான் பழக வாய்ப்புக் கிடைத்தது என்பது உண்மையில் பெருமைப்படக்கூடிய செய்தியேயாகும்.

எந்தத் தலைவரை நாம் பெருமையாக மதித்துப் போற்றுகிறோமோ அந்தத் தலைவர் நம்மை மதிக்கிறார் என்பதே சிறப்புத்தான்.

திருவள்ளுவர் அரசர்களோடு மற்றவர்கள் எப்படிப் பழக வேண்டும் என்று ஒரு குறளில் விளக்குகின்றார்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். —திருக்குறள்

அக்காலத்தில் அரசர்களோடு பழகுவது போலத்தான் இக்காலத்துத் தலைவர்களோடு பழகுவதும் இருக்க வேண்டும்,

புரட்சிக் கவிஞரோடு நான் வள்ளுவர் கூறிய விதிப்படி தான் பழகினேன். நெருங்கியும் பழகவில்லை, விலகியும் இருக்கவில்லை.

இந்த நூலில், நான் அவரோடு எந்த அளவில் பழகினேனோ அந்த அளவு மட்டுமே செய்திகளைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். நான் அவரை எந்த அளவு அறிந்திருந்தேனோ அந்த அளவு மட்டுமே அவரை எடுத்துக் காட்டியிருக்கிறேன். அவருடைய தகுதிகளை எந்த அளவு பெரிதாய் மதித்தேனோ, அவ்வளவு பெருஞ் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப்பின் தெற்கில் வந்தே
இடக்கினைச் செயநினைந்த
எதிரியை அந்நாள் தொட்டே

அடக்கடா என்றுரைத்த
அறங்காக்கும் தமிழே! இங்குத்
தடைக்கற்கள் உண்டென் றாலும்
தடந்தோளுண் டெனச் சிரித்தாய்!

இதுதான் புரட்சிக் கவிஞருடைய கொள்கை. அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் என்று கூறிக் கொண்டு சிலர் அவரைப் பலப்பலவாறு அறிமுகப்படுத்துகிறார்கள்.

தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வதற்காக இன்று பலர் அவரைப் பலவாறு சித்தரிக்கிறார்கள். சிலர் ஆராய்ச்சி என்ற பெயரில்,

அவர் என்னென்ன தவறு செய்தார், எங்கெங்கே வழுக்கி விழுந்தார் என்பதையெல்லாம் நாள்வாரியாகப் பட்டிய விட்டுக் காட்டி ஏதோ பெரும் புதையலைக் கண்டு விட்டவர்கள் போல் கூத்தடிக்கிறார்கள்.

இன்னும் சிலரோ, தாம் கேள்விப்பட்ட சில வதந்திகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றைக் கூட்டியும் குறைத்தும் தம்விருப்பம் போல் எழுதி ஏதோ பெரியசாதனையைப் புரிந்து விட்டதாகவும், பெரிய உண்மையைச் சொல்லி விட்டதாகவும் ஆர்ப்பரிக்கிறார்கள்.

பெரியார். புரட்சிக் கவிஞர் போன்ற தன்மானத் தலைவர்களை—கடவுள் மறுப்பாளர்களை—அவர்கள் இறந்த பிறகு சிலர் பக்திமான்களாக காட்டுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பெரியார் கடைசிவரை எந்தக் கவலையும் இல்லாமல் வாழ்ந்தார். இதன் இரகசியம் தெரியுமோ? அவர் இரகசியமாகத் தினந்தோறும் விநாயக பூசை செய்துவந்தார் என்று கூடவேயிருந்து பார்த்தது போல் சிலர் பேசுவார்கள்.

அதுபோலவே, பாரதிதாசன் எப்போதோ பாடிய கடவுள் பாடல்களை எடுத்துக் காட்டி அவரைப் பக்திமானாகக்

காட்டுவார்கள். இப்படி எல்லாம் கடவுள் கட்சியை நிலை நாட்ட வேண்டிய கட்டாயத்தில் கடவுள் இருப்பது பரிதாப மானதே!

சிலர் அவர் தொடக்கத்தில் எழுதிய காந்திப்பாட்டு கதர்ப்பாட்டு போன்றவற்றை எடுத்துக் காட்டி அவரை ஒரு தேசிய வாதியாகச் சித்தரிப்பார்கள்.

பாரதிதாசன் தன்மான இயக்கத்தில் சேர்ந்த பிறகு ஏற்கெனவே தாம்பாடிய சுப்பிரமணியர் துதியமுது, காந்திப் பாட்டு, கதர்ப்பாட்டு போன்ற தம்மிடம் மிஞ்சியிருந்த சிறு சிறு வெளியீடுகளையெல்லாம் வீதியில் எடுத்துப் போட்டுக் கொளுத்தி விட்டார்.

இதுபோன்ற பித்தலாட்டங்கள் நடக்கும் என்று அறிந்து தான் பெரியார், தம் சிலை வைப்பவர்களை அதன் கீழே கடவுள் மறுப்பு வாசகங்கள் எழுதிப்பதிக்குமாறு கட்டளை யிட்டார்.

மறைந்தவர்கள், எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்தார் களோ, அந்த இலட்சியங்களை வளர்ப்பதுதான், அவர் களுக்குப்பின் நாம் செய்ய வேண்டிய மரியாதையாகும்.

அதை விட்டு அந்த இலட்சியங்களைக் கைவிட்டு விட்டு அவர்களுக்கு விழாக்கொண்டாடுவதும், சிலைகளுக்கு மாலை போடுவதும், அவர்களைப் பற்றிய உண்மைகளைத் திரித்துக் கூறுவதும் தவறான செயல்கள் ஆகும்.

இவர்களைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று புரட்சிக் கவிஞரே கூறியிருக்கிறார்.

ஆளுவோர்க் காட்பட் டேனும்
அரசியல் தலைமை கொள்ள
நாளுமே முயன்றார் தீயோர்
தமிழே! நீ நடுங்கவில்லை!

புரட்சிக் கவிஞர் தொடக்கத்தில் கடவுள் பக்தராகவும், காந்தியவாதியாகவும், இருந்தார் என்றால், பிற்காலத்தில் அவர் பெரியாருடைய தன்மான இயக்கத்தில் சேர்ந்த பிறகு, நாத்திகராகவும், திராவிட நாட்டு உரிமைக்காகப் பாடு படுபவராகவும் இந்தி எதிர்ப்பாளராகவும் மாறிவிட்டடார்.

இறுதிவரை அவர் இந்தக் கொள்கைக்காரராகவே வாழ்ந்தார்.

தந்தை பெரியாரோடு முரண்பட்டு நின்ற காலங்களில் கூட அவர் தன்மானக் கொள்கையில் உறுதியோடு நின்றார்.

வடவர் ஆதிக்கம் பார்ப்பனர் ஆதிக்கம் இந்தி ஆதிக்கம் இவை தமிழரை அடிமைப்படுத்த வந்தவை என்பதில் சிறிதும் அசைக்க முடியாத கருத்துக் கொண்டிருந்தார்.

தமிழ்நாடு தனிஉரிமை பெற்றால் தான் தமிழர்க்கு வாழ்வு உண்டு என்பதும்

தமிழ் மொழி வேற்றுமொழிக் கலப்பின்றி தனித் தமிழாகக் கையாளப் பெற்றால்தான் மொழிவளம் கூடும் என்பதும்

சாதி, மதம், வருண பேதம்,வேதம், சாஸ்திரம், புராணம் இதிகாசம் இவை யொழியும் நாளே தமிழர் வாழ்வு சிறக்கும் நாள் என்பதும்

பாவேந்தர் பாரதிதாசனுடைய அசைக்க முடியாத தன் மானக்கொள்கைகள்.

இதற்கு மாறாக அவரைச் சித்திரித்துக் காட்டுவோர் பித்தலாட்டக் காரர்கள்.

தமிழ் மொழி, தமிழ்நாடு தமிழ் இனம் பற்றிய அவருடைய அசைச்க முடியாத கொள்கைகளுக்கு இன்றும் நல்ல சான்றாக நின்று நிலவுவது தமிழியக்கம் என்னும் அரிய நூலாகும்.

பாவேந்தர் பாரதிதாசனின் உண்மையான உருவத்தை தமிழியக்கம் நூலிலே நன்றாகக் காண முடியும்.

தமிழியக்கம் நூலின் தொடக்கப் பாட்டு இது;

கரும்புதந்த தீஞ்சாறே! கனிதந்த நறுஞ்சுளையே!
கவின் செய்முல்லை
அரும்புதந்த வெண்ணகையே! அணிதந்த செந்தமிழே!
அன்பே! கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலை
ஈடழித்து
வரும்புதுமை நினைக்கையிலே மனம் பதைக்கும்!
சொல்வதெனில் வாய் பதைக்கும்!

தமிழ் இலக்கியம் கற்பவர்களும், தமிழ் ஆராய்ச்சி செய்யப் புகுவோரும் ஓர் உண்மையை நேர் காணலாம்.

தொன்று தொட்டு ஒரு கூட்டம் தொடர்ந்து தமிழ் மொழியை ஒழித்துக் கட்டவும், தமிழ்ப் பெருமையைக் குறைத்துக் காட்டவும் சதி செய்து வருகிற உண்மையை அறியலாம்.

தமிழ் மொழியை அழிப்பதன் மூலம் தமிழினத்தை அழித்துவிட முடியும் என்ற குறிக்கோளை உடையதாக அந்தக் கூட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

தமிழின் பகைவர் தன் பகைவர் என்று எண்ணி வாழ்ந்தவர் புரட்சிக் கவிஞர். அவர் ஒரு தமிழ் மறவனாக வாழ்ந்தார்.

வீறு சான்ற அவருடைய தமிழ்க்குரல் என்றென்றும் தமிழினத்துக்கு உணர்வூட்டிக் கொண்டே யிருக்கும்,

இப்படிப்பட்ட ஒரு புரட்சிப்பரம்பரையைச் சேர்ந்தவன் என்ற எண்ணம் என்னிலே ஒரு பெருமித உணர்வை எழுப்புகிறது.

அவருடைய தன்மானக் கொள்கை வழிபட்டு நிற்பவன் என்ற எண்ணம் என்னிலே ஒரு புத்துணர்வை எழுப்பிக் கொண்டேயிருக்கிறது.

இந்த உணர்வும் எழுச்சியும் உடையதாக இளைய சமுதாயம் மலரவேண்டும் என்ற குறிக்கோளோடு, இந்தப் புத்தகத்தை எழுதுகிறேன்.

புரட்சிக் கவிஞர் வழி நிற்போம்!
புதிய தமிழ் உலகைப் படைப்போம்!

நாரா நாச்சியப்பன்

# ஆயிரம் விளக்குகளை ஏற்றிய திருவிளக்கு

அப்பொழுது நான் கோனாபட்டு சரசுவதி உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தேன், நான்காவது படிவம் என்று நினைக்கிறேன். கோனாபட்டில் தமிழ் இளைஞர் கழகம் ஒன்று இருந்தது. அந்தக் கழகத்தின் செயலாளர் முருகு சுப்பிரமணியன்.

தமிழ் இளைஞர் கழகத்தினர் எல்லாம் தமிழில்—அதுவும் தனித்தமிழில் நடைபெற வேண்டும் என்ற கொள்கை யுடைய வர்கள். நடை முறையில் தனித்தமிழ் பழக்கத்திற்கு வர வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர்கள். மறைமலை யடிகளின் கனவை நனவாக்கப் பிறந்த உறுதிபடைத்த இளம் வீரர்கள். அவர்களை வழிநடத்திய முருகு சுப்பிரமணியன் அவர்களும் அப்போது இளைஞரே.

இளைஞர் கழகத்தினர் மாலை நேரத்தில் ஒன்றுகூடி விளையாடுவார்கள், அப்போது செட்டிநாட்டில் மிகுதியாக ஆடப்பெற்ற விளையாட்டு பாட்மிண்டன். அதையேதான் கோனாபட்டு இளைஞர் கழகத்தினரும் விளையாடினார்கள். மற்ற ஊர்களில் பாட்மிண்டனாக ஆடப்பெற்ற விளையாட்டு கோனாபட்டில் 'பூப்பந்தாக' விளையாடப் பெற்றது.

விளையாட்டில் பயிலும் சொற்களும் தனித் தமிழிலேயே கையாளப் பெற்றன.

அக்காலத்தில் முருகு சுப்பிரமணியன் கையெழுத்து இதழ் ஒன்று நடத்தினார், அதன் பெயர் "இளந் தமிழன்" அவ்விதழில் ஒவ்வோர் இதழிலும் விளையாட்டுகளில் பயின்று வரும் ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள் பட்டிய லிட்டுக் கொடுப்பார். தமிழ் இளைஞர் கழகத்தினர் அச்சொற் களைப் பயன்படுத்தியே விளையாடுவர்.

தமிழ் இளைஞர் கழகம் ஆண்டுதோறும் பொங்கல் விழாக் காலத்தில் ஏழுநாட்கள் தமிழர் விழா நடத்துவது வழக்கம். இதில் பல தமிழறிஞர்கள் வந்து சிறந்த சொற் பொழிவுகள் ஆற்றுவார்கள். ஒரு தமிழ் விழாவுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வந்து சொற்பொழிவாற்றினார்.

அவருடைய சொற்பொழிவு இளம் உள்ளங்களைக் கிளர்ந்தெழச் செய்வதாய் இருந்தது. நெஞ்சில் ஒரு புத்துணர்ச்சியைப் பாய்ச்சுவதாய் இருந்தது. தமிழார்வத் தைக் கொழுந்துவிடச் செய்வதாய் இருந்தது.

இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க புரட்சிக் கவிஞர் கோனாபட்டிலேயே ஒரு மாத காலத்துக்குமேல் தங்கினார். முருகு சுப்பிரமணியன் அவர்கள் வீட்டில்தான் அவர் சிறப்பு விருந்தினராகத் தங்கினார், முருகுவின் தாயார், தன் மகனின் இலட்சியத் தலைவருக்கு நல்ல விருந்து படைத்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தில் பாரதிதாசன் பேசிய முழக்கப் பேச்சைக் கேட்டு எழுச்சி பெற்றவர்களிலே நான் ஒருவன்.

அதுவரையில் பாரதி, நாமக்கல்லார், கவிமணி ஆகி யோரின் கவிதைகளையே படித்தறிந்திருந்த நான் பாரதி தாசன் கவிதைகள் நூல் படிக்கத் தொடங்கினேன். பாரதி தாசன் கவிதைகள் முழுவதும் நாவல் படிப்பதுபோல் ஆசை யோடு ஆர்வத்தோடு படித்து முடித்தேன். அவரையே இலக்கிய ஆசிரியராகக் கொண்டேன். அவர் கவிதைகளைப்

படிக்கப் படிக்க என் உள்ளத்தில் கவிதை ஊற்று வெள்ளப் பெருக் கெடுத்தது, நான் அவரோடு ஒன்றிப் போனேன்; அவரைப் போலவே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றேன்.

பள்ளியில் எத்தனையோ செய்யுள்கள் படித்திருக்கிறேன். பாடம் செய்திருக்கிறேன். எத்தனையோ புலவர்கள் கூட்டங் களில் பைந்தமிழ் இலக்கிய மேற்கோள்களை நயங்களோடு விளக்கி ஆற்றிய சொற் பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். பாரதியாருக்குப் பிறகு தமிழ் நாட்டில் தோன்றிய பல பெருங் கவிஞர்களின் கவிதைகளைப் படித்திருக்கிறேன்.

பாரதிதாசன் கவிதைகளைப் படித்த போது ஏற்பட்ட உணர்ச்சியும் உந்துதலும் அதற்குமுன் என்னில் எழுந்த தில்லை. பாரதிதாசன் கவிதைகளைப் படித்தபிறகு, ஏற்பட்ட பாடவேண்டும்; எழுதவேண்டும் என்று முனைப்பு அதற்குமுன் ஏற்பட்டதில்லை.

ஆம்! ஒரு திருவிளக்கு பல திருவிளக்குகளை ஏற்றி விடுவது போன்ற ஆற்றல் அவருடைய கவிதைகளுக்கிருந்தது. என்னை மட்டுமல்ல; அப்போது என்னொத்த வயதுடைய இளைஞர் பலரைக் கவிதை எழுதத் தூண்டுவனவாய் இருந்தன அவருடைய பாடல்கள்.

பாரதியாரைப் பின்பற்றி எழுதிய பெருங்கவிஞர்கள் ஏழெட்டுப்பேர்தான் இருந்தார்கள். ஆனால் பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய கவிஞர்கள் நூற்றுக் கணக்கில் இருந் தார்கள். அத்தனை பேரும் முத்து முத்தாய் எழுதினார்கள்.

முருகு சுப்பிரமணியன் வீட்டில் பாரதிதாசன் தங்கியிருந்த போது, பள்ளி மாணவர்களாகிய நாங்கள் பள்ளிமுடிந்தவுடன் இரண்டொருவராகச் சென்று அவரைப் பார்த்துவிட்டு வீடு செல்வது வழக்கம்.

நான் அடிக்கடி போவேன்.

அவரோடு சமமாக உரையாடும் ஆற்றலோ தகுதியோ எனக்கு அப்போது இல்லை. நான் ஒரு பள்ளி மாணவன். இலக்கியவாதியல்ல.

ஒருநாள் நான் எழுதிய பாடல் ஒன்றைப் பயந்து பயந்து அவரிடம் நீட்டினேன். ஐயா, நன்றாக இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டே என்ன சொல்வாரோ என்ற குழப்பத்துடன் தாளை நீட்டினேன்.

வாங்கிப் பார்த்தார்.

பாடிப் பார்த்தார்.

பிறகு என்னை நோக்கினார்.

'நன்றாய் இருக்கிறது. ஆனால் நீ இலக்கணம் படிக்க வேண்டும். யாப்பிலக்கணம் படித்த பிறகுதான் கவிதை எழுத வேண்டும். எழுதும் கவிதை பிழையில்லாமல் இருக்க வேண்டும்' என்றார்.

''ஐயா, இதில் பிழை இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''ஆம்'' என்று மூன்று பிழைகளைச் சுட்டிக் காட்டினார். அவற்றைத் திருத்தியும் காட்டினார்.

ஆர்வத்தால் கவிதை எழுத முனைவோர், பிழையில்லாத நல்ல இலக்கியங்கள் படைக்க வேண்டும் என்பதிலே குறியாக இருந்தார் புரட்சிக் கவிஞர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தொடக்க காலத்தில் தனித்தமிழில் எழுதவில்லை. பாரதிதாசன் பாடல்கள் முதல் தொகுதியைப் பார்த்தாலே இந்த உண்மை விளங்கும்.

பிறமொழிச் சொற்கள் பல விரவிய பாடல்களையே அதில் பார்க்கலாம். இன்னும் சொல்லப்போனால், தனித் தமிழில் எழுதப் புகுவோரைக் கிண்டல் செய்தும் இருக்கிறார்.

முருகு சுப்பிரமணியன் பாரதிதாசனின் விசிறி. ஆனால் தனித்தமிழ் பரப்புவதில் உறுதியான நோக்கம் உடையவர். அவர் இளைஞர். பாரதிதாசனோ பெருங் கவிஞர். இருந்தாலும் அவர்கள் இருவரும் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வதில் வயது தடையாக இருக்கவில்லை. முருகு சுப்பிரமணியன் தனித் தமிழை வற்புறுத்திப் பேசுவார். பாவேந்தர் அதற்கு மறுப்புரை வழங்குவார்.

முருகு சுப்பிரமணியன், மறைமலை யடிகளாரின் நூல்களைப் படித்துப் பார்க்குமாறு பாவேந்தரை வற்புறுத்துவார். தம்மிடமிருந்த நூல்களையும்-அவற்றின் பகுதிகளையும் படித்துக் காட்டுவார். பாவேந்தரோ தனித்தமிழ் நடைமுறையில் கையாள இயலாது என்று அடித்துச் சொல்வார். சில தனித்தமிழ்ச் சொல்லாக்கங்களைக் கிண்டலும் செய்வார்.

பாவேந்தர் தொடர்ந்து மறைமலையாரின் நூல்களைப் படித்தார். மறைமலையடிகளாரின் சமயக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத பாவேந்தர், மொழிக் கொள்கையை முழுவதுமாக ஏற்றுக் கொண்டார். இனித் தனித் தமிழிலேயே நூல்கள் எழுதுவது என்று உறுதி பூண்டார். உறுதி ஏற்ற பிறகு வெளிவந்த அவருடைய நூல்கள் முழுவதுமே- உரை நடை, பாட்டு எல்லாமே-தனித்தமிழ் நூல்களாக வெளி வந்தன. ஒரு நூலைத் தனித்தமிழ்த் தந்தையான மறைமலை யடிகளாருக்கே ''திருமுன் படையல்'' ஆக்கினார்.

பாரதியாரைத் தன் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட பாவேந்நர் பிறகு பெரியாரைத் தலைவராக ஏற்றுக் கொண்டார். பெரியாரோடு முரண்பட்ட காலங்களில்கூட பெரியாரின் தன்மானக் கொள்கைகளில் அவர் முரண்பாடு கொள்ளவில்லை. பார்ப்பனிய வெறுப்பாளராகக் கடைசி

வரை வாழ்ந்த பாரதிதாசன். பாரதியாரை-வெறுக்கவில்லை. பெரியார் கொள்கையில் தீவிரம் ஏற்பட ஏற்பட அவருடைய பாரதிப் பற்றும் தீவிரமாகவே இருந்தது.

ஏனெனில், பாரதி ஆத்திகராக இருந்தாலும், வேத புராணங்களை மதிப்பவராக இருந்தாலும், ஏற்றத் தாழ்வை யும் சாதிப்பாகுபாடு, மதப்பாகுபாடுகளையும் தொடக்க முதல் இறுதிவரை வெறுத்தொதுக்கி அவற்றை ஒழிக்கப் பாடுபட்டவராக இருந்தார். அவரே பார்ப்பன ஆதிக்கத்தைச் சாடிப் பாடியிருக்கிறார்.

ஆரியர் என்று தம்மையும், நாட்டையும் அழைத்துப் பெருமைப்பட்ட பாரதி ஆரியர்களின் வேர்க்கொள்கையான வருண பேதத்தை வன்மையாகச் சாடினார். மதப்பற்றும் பாரம்பரியப் பற்றும் அழுத்தமாகக் கொண்டிருந்த பாரதி- அந்தக் கொடுமைகளை மிக அழுத்தமாகக் கண்டிப்பவராக இருந்தார்.

இத்தகைய காரணங்களால்தான் முற்றிலும் தன்மானக் கொள்கையுடையவரான பாரதிதாசன், பாரதியைத் தம் வழிகாட்டியாக இறுதிவரை கொண்டிருந்தார்!

நடைமுறையில் பெரியார் கையாண்ட வழிமுறைகளில் முரண்பாடு ஏற்பட்டு ஒதுங்கிய காலத்திலும், பெரியாரின் தன்மானக் கொள்கையிலிருந்தும் நாத்திகக் கொள்கை யிலிருந்தும் இறுதிவரை பாரதிதாசன் பின்வாங்கவில்லை.

மறைமலையடிகளின் சமயக் கொள்கைகளில் சற்றும் விருப்பில்லாத பாரதிதாசன், தனித்தமிழ்க் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டார். தாமே தனித்தமிழைப் பரப்பும் தொண்டராகி விட்டார்.

தொடக்க காலத்தில் சுப்பிரமணியர் துதியமுது, கதர்ப் பாட்டு, காந்தி பாட்டு முதலிய பாடல்களை எழுதிக் குவித்த பாரதிதாசன். பெரியார் இயக்கத்தில் சேர்ந்த பிறகு, ஒரு பீரோ நிறைய இருந்த மேற்படி புத்தகங்களைத் தம் கையா லேயே நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டார் என்றால், பகுத் தறிவுக் கொள்கைகளில் அவருக்கிருந்த அழுத்தத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த உறுதி—தன்மான பகுத்தறிவுக் கொள்கைகளில் அவர் வைத்த நம்பிக்கை இறுதிவரை சிறிதுகூடக் கலைய வில்லை. இதுதான் அவர் பெருமை!

# கல்கி தலைமையில் கனல் வீசும் சொற்பொழிவு

கோனாபட்டில் பல கூட்டங்களில் பாரதிதாசன் பேசினார். எல்லாம் தன்மானக் கழகக் கூட்டங்கள். அந்தக் காலத்துத் தன்மானக் கழகக் கூட்டங்கள் காரசாரமாக இருக்கும். எதையும் எடுத்தெறிந்து பேசுவதுதான் சொற் பொழிவாளர்களின் வழக்கம்.

கூடியிருப்பவர்கள் கோபப்படக்கூடாது என்றோ, கூட்டம் கைதட்ட வேண்டும் என்றோ அவர்கள் பேசுவதில்லை. கூடியிருப்பவர்கள் தன் பேச்சில் வேதனைப்படுவார்களே, தன்னை வெறுப்பார்களே என்று அவர்கள் சிறிதுகூட இறங்கி வருவதில்லை. இதற்குப் பாரதிதாசனும் விலக்கல்ல என்பதைக் காட்டிலும். இந்தப் போக்கில் அவர் தலைவர் என்றே கூறிவிடலாம்.

அரட்டல் மிரட்டல் நிறைந்த பேச்சே கருத்துக் குருடர் களின் வயிற்றைக் கலக்கிவிடும்.

சிங்கம் போல் அவர் முழங்குகிற போதே கூட்டத்தில் கேள்வி கேட்டுக் கலகம் செய்ய வந்தவர்கள் பீதியுற்று அடங்கி போவார்கள்.

கேள்விகளுக்குப் பதிலும் சாந்தமாக வராது; சாட்டையடி போல் தான் வரும். இளைஞர்களுக்குப் பாரதிதாசன் கூட்டம் என்றால் கொண்டாட்டம் தான்.

அக்கம்பக்கத்தில் எங்காவது பாரதிதாசன் பேசுகிறார் என்று செய்தியறிந்தால் போதும் நாங்கள் பறந்து கொண்டு தான் போவோம். அவ்வளவு உற்சாகம்!

ஆவினிப்பட்டி என்ற ஊரில் பாவேந்தர் பேசுகிறார் என்ற செய்தி அறிந்தோம். துண்டறிக்கைகளை வாங்கிப் பார்த்த போது வியப்பாய் இருந்தது,

கல்கி ஆசிரியர் தலைமையில் ஒரு பள்ளி ஆண்டுவிழாவில் அந்த ஆண்டுவிழாக் கூட்டத்தில் பண்டிதமணியின் மாணவர் வித்துவான் விசு திருநாவுக்கரசு அவர்களும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும் பேசுகிறார்கள் என்று அந்தத் துண்டறிக்கை கூறியது.

கோனாபட்டு சரசுவதி உயர் நிலைப் பள்ளியில் நாங்கள் பயின்று கொண்டிருந்தோம். நால்வரும் கவிஞர்கள்.

நால்வரும் பாரதிதாசன் பரம்பரையில் பிற்காலத்தில் அறிமுகமானவர்கள். நாங்கள் நால்வரும் ஆவினிப்பட்டி போவதென்று முடிவெடுத்தோம்.

ராஜாஜியின் சீடரான கல்கி தலைமையில் பெரியாரின் தொண்டரான பாரதிதாசன் எப்படிப் பேசுகிறார் என்று பார்க்க வேண்டும்.

இதுதான் எங்கள் ஆவல்!

ஆவினிப்பட்டிக்குப் பேருந்து கிடையாது. மாட்டுவண்டி தான் வாடகைக்குக் கிடைக்கும் ஒரே ஊர்தி. கார் உண்டு. ஆனால் அதில் பெரியதனக்காரர்கள் தான் போவார்கள்.

மாட்டு வண்டிக்கு வாடகை ரூபாய் ஐந்தாவது கேட் பான். எங்களிடம் அவ்வளவு பணம் கிடையாது. நான்கு பேரும் ஆளுக்கு ஒன்றே கால் ரூபாய் செலவழிக்கக் கூட முடி யாதவர்கள். ஆகையால் ஆவினிப்பட்டிக்கு நடந்து போவ

தென்று முடிவு செய்தோம். மாலை 7 மணிக்கு கூட்டம். நண்பகல் உணவுக்குப்பின் இரண்டு மணியளவில் நடைப் பயணம் புறப்பட்டோம்.

பேசிக் கொண்டே நடந்ததில் தொலைவு தெரியவே யில்லை. இளையாத்தங்குடி போய் அங்குள்ள திருக் கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு அங்கிருந்து ஆவினிப்பட்டியை அடையும் போது மணி ஐந்து.

பள்ளிக்கூடம் நடத்துபவர்கள் கூட்டத்திற்கு வருபவர்களுக்கு மாலைச் சிற்றுண்டியும், இரவு விருந்தும் ஏற்பாடு செய்திருந்தார்கள்,

சிற்றுண்டி யுண்டபின் கூட்டம் காணச் சென்றோம்.

பள்ளியின் மையக் கூடத்தில் கூட்டம், வண்ணத் தோரணங்கள் அழகு செய்தன,

மாணவ மாணவியர் கலைநிகழ்ச்சிகள் முடிந்த பிறகு சரியாக ஆறு மணிக்கு கல்கி ஆசிரியர் வந்து தலைவர் இருக்கையில் அமர்ந்தார். வித்துவான் விசு. திருநாவுக்கரசும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் வந்து தத்தம் இருக்கையில் அமர்ந்தார்கள்,

இறைவணக்கம் முடிந்தபின் பள்ளித் தலைவர் வரவேற்புரை வாசித்தார். தலைவர் கல்கி சுருக்கமாக முன்னுரை கூறி முடிவுரையில் விரிவாகப் பேசுவதாகக் கூறி அமர்ந்தார். அடுத்து வித்துவான் விசு. திருநாவுக்கரசு அவர்கள், சிவப்பதிகாரம்பற்றி ஓர் இனிய உரையாற்றினார். வித்துவான் விசு திருநாவுக்கரசு பண்டிதமணியின் அன்பு மாணவர். சிலப்பதிகாரத்தில் ஆழ்ந்த புலமை மிக்கவர். பெண்போல் இனிய குரலில் அவருடைய தமிழ்ப் பேச்சு தேன்போல் இனிமையாயிருந்தது. அதன்பிறகு தலைவர் புரட்சிக் கவிஞரைப் பேசுமாறு அழைத்தார். நாங்கள் நிமிர்ந்து உட்கார்ந்தோம்.

கோடையிடி முழக்கம் தொடங்கியது.

அடலேறு போன்ற பார்வையோடு, அதட்டும் குரலில் பாவேந்தரின் வீரச் சொற்பொழிவு தொடங்கியது.

இந்த நாட்டில் அறியாமை எவ்வாறு வளர்ந்தது? சாதி பேதம் உண்டாக்கியவர் யார்? கடவுள்களால் ஏற்பட்ட கலகங்கள் என்ன? தலையில் பிறந்தவர்கள் காலில் பிறந்தவர் களை அழுத்தி வைத்து நடத்தும் கொடுமைகள் என்ன? இத் துயரத்திலிருந்து தமிழன் மீள வழி என்ன?

வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள், சாஸ்திரங் கள் மறுநீதி ஆகிய அனைத்தும் இந்த நாட்டு மக்களை அறியாமைக் குழியில் அழுத்திவைத்து பேதப்படுத்தி முன்னேற முடியாமல் தடுத்து நிறுத்தும் கருவிகளாய் இருக்க—அவற்றைக் காப்பாற்றும் இனத்தவர்கள் நாட்டுத் துரோகிகள் அல்லா?

இப்படிப் பச்சை பச்சையாகக் கல்கியின் இனத்தவர்கள் ஐயாயிரம் ஆண்டுகளாக மற்ற இனத்தவர்களின் முன் னேற்றத்துக்கு முட்டுக்கட்டைபோட்ட செயல்களை யெல் லாம் அடுக்கடுக்காகச் சொல்லி ஆத்திரப்பட்டார் புரட்சிக் கவிஞர்.

எரிமலை குமுறி ஓய்ந்தது.

கல்கி முடிவுரை பேச எழுந்தார்.

கல்கி அந்தக் காலத்தில் நகைச் சுவை எழுத்தாளராகப் பெயர் பெற்றவர்.

தன் இனத்தைத் தாக்கிப் பேசிய பாரதிதாசனுக்கு நகைச் சுவைக் கிண்டலாகவே மறுப்புச் சொல்வார் என எதிர்பார்த்தோம்.

கல்கி பேசத் தொடங்கினார்.

தமிழ் அன்பர்களே,

தமிழ் பாஷை (மொழி) மிக இனிமையானது என்று சொல்வார்கள். தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்ற பொருள்உண்டு. அதை இங்கே நிதர்சனமாகக் (நேருக்குநேர்) கண்டோம். வித்துவான் விசு. திருநாவுக்கரசு அவர்கள் இனிய தமிழில், சிலப்பதிகாரத்தை விளக்கி எல்லோரும் களிப்படையுமாறு பேசினார். அவருடைய குரலும், பெண்ணின் குரல் போல் மிக இனிமையாய் இருந்தது. அவர் எடுத்துக் கொண்ட தலைப்பும் இனிமையாய், சொற்பொழிவும் இலக்கியநயம் கூறும் சுவையுடையதாய் இருந்தது.

தமிழ் மொழி இனிமையானது. இனிமை மட்டும் தானா தமிழில் உள்ளது. அதற்கு வீரம் இல்லையா?

சென்ற மாதம் சென்னையில் தமிழுக்கு வீரம் கிடையாது என்று ஒரு தமிழ் எழுத்தாளர் பேசினார். (திரு. க. நா. சுப்பிரமணியன் என்பவர் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இவ்வாறு கூறிப் பெரும் எதிர்ப்புக்கு ஆளானார். அதைத் தான் கல்கி இங்கே குறிப்பிடுகிறார்) தமிழுக்கு வீரம் இல்லை என்று கூறிய அந்த எழுத்தாளர், இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தால், தமிழ் எவ்வளவு வீரமுடையது என்பதை நிதரிசனமாக (நேராகக்) கண்டிருப்பார். ஆம். அவர் நமது புரட்சிக் கவிஞருடைய சொற்பொழிவை நேரில் கேட்டிருக்க வேண்டும். வீரத்தில்-தமிழ் வேறு எந்த மொழிக்கும் சளைத்த தல்ல என்பதைப் பார்த்திருக்கலாம்.

எரிமலை குமுறுவது போலவும், சிங்கம் கர்ஜிப்பது போல வும், புயல் வீசுவது போலவும், வெள்ளம் புரளுவது போலவும், எவ்வளவு ஆவேசமாகப் பேசினார் புரட்சிக் கவிஞர். இவ்வளவு ஆவேசத்தோடும் உத்வேகத்தோடும் புரட்சிக் கவிஞர் பேசிய கருத்துக்கள் அனைத்தும் பொன்னான கருத்துக்கள். நம் சிந்தனையைத் தூண்டும் கருத்துக்கள். இப்படிப் புரட்சிகர

மாகச் சிந்தித்தால்தான் தமிழ்நாடு விழிப்படையும். தூங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி யெழுப்ப இப்படிப்பட்ட உத்வேகமான பேச்சுக்கள் தேவை. புரட்சிக் கவிஞரின் ஒவ்வொரு கருத்தும் நம் நாட்டுக்கு அத்தியாவசியமானது என்று நான் அடித்துச் சொல்வேன்.

இவ்வாறு கல்கி புரட்சிக் கவிஞரைப் பாராட்டிப் பேசினார். தொடர்ந்து வந்த கல்கி ஏட்டில் புரட்சிக் கவிஞரோடு தாம் நின்று எடுத்துக் கொண்ட புகைப்படத்தைப் போட்டு, ஆண்டுவிழா நிகழ்ச்சிபற்றி சிறிய செய்தி யொன்றும் வெளியிட்டிருந்தார்.

இரவு நெடுநேரம் ஆகிவிட்டபடியால் நானும் மு. அண்ணாமலையும், நாகமுத்தையாவும் இராம. வே. சேதுராமனும் அன்று இரவு ஆவினிப்பட்டிப் பள்ளிக்கூடத்திலேயே தூங்கிவிட்டு காலையில் எழுந்து கோனாபட்டுக்கு நடந்து வந்தோம்.

பாரதிதாசனாரின் ஆவினிப்பட்டிப் பேச்சு இன்றும் பசுமையாக என் நினைவில் நிற்கிறது.

# ஆத்தங்குடியில் பாரதிதாசன்

கோனாபட்டு முருகு சுப்பிரமனியன் வீட்டில் பாரதிதாசன் ஏறத்தாழ ஒரு மாதம் தங்கியிருந்தார், சுற்றுப்புறங்களில் உள்ள ஊர்களுக்குச் சொற்பொழிவாற்றச் செல்வதும், பிறகு கோனாபட்டு வருவதும் தொடர் நிகழ்ச்சிகள். திருப்பத்தூர் காரைக்குடி கானாடுகாத்தான் இப்படிப் பல ஊர்களில் கூட்டங்களுக்குப் போய் வருவார்.

கோனாபட்டிலும் இடையிடையே சொற்பொழிவு நடைபெறும்.

ஒருநாள் பக்கத்து ஊர் ஒன்றிலிருந்து பாரதிதாசனைச் சொற்பொழிவுக்கு அழைக்க ஒருவர் வந்திருந்தார். கவிஞர் வர ஒப்புக் கொண்டார். கூட்டம் பற்றித் துண்டறிக்கை போட்டு நன்கு விளம்பரம் செய்யுமாறு கவிஞர் ஆணையிட்டார். வந்தவர் துண்டறிக்கை எழுதித் தரும்படி கவிஞரிடமே கேட்டார். அருகில் நான் இருந்தேன். "இவனே, ஒரு தாள் எடுத்துவா; நான் சொல்கிறபடி எழுது' என்றார் புரட்சிக் கவிஞர். நான் ஒரு தாள் எடுத்துவந்தேன். பேனாவைத் திறந்தேன். தாளின் உச்சிமையத்தில் "தமிழ் வாழ்க" என்று எழுதினேன்.

"என்ன? உ சிவமயம் போடுகிறாயா?" என்றார் கவிஞர். "இல்லை ஐயா, "தமிழ் வாழ்க" எழுதினேன்"

''அதைத்தான் சொல்கிறேன். அவன் உ சிவமயம் எழுதினால் நீ தமிழ் வாழ்க எழுதுவாய்! ஒரு வழக்கத்தை விட்டால் அந்த இடத்தில் இன்னொரு வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தேவையில்லை. தமிழ் வாழ்வதற்காகத் தான் நாம் சொற்பொழிவு ஆற்றுகிறோம்; கவிதை எழுது கிறோம், நூல்கள் படைக்கிறோம். இப்படியெல்லாம் செயல் படும்போது. அதற்கு ஏன் பட்டயம் எழுத வேண்டும்.'' என்று தொடர்ந்து பேசினார்.

''ஐயா, அடித்து விடவா?'' இது, நான்.

''எழுதியதை அடிக்க வேண்டாம். தொடர்ந்து நான் சொல்வதை எழுது'' என்று துண்டறிக்கையை முறையாகச் சொல்ல நான் எழுதி முடித்தேன்.

செயலாற்றுபவனுக்கு முழக்கங்கள் தேவையில்லை என்ற கருத்தை மனத்தில் படிய வைத்துக் கொண்டேன்.

* * *

கோனாபட்டில் ஒரு நண்பன் வீட்டில் கவிஞருக்கு விருந்து, நான் அன்று பள்ளிக்குச் செல்லவில்லை. அதனால் விருந்துபற்றிய செய்தியும் அறியவில்லை.

மறுநாள் என் நண்பன் கூறினான். ''நேற்று ஒரு நல்ல விருந்தை இழந்துவிட்டாய். அதனினும் மேலாக ஒரு நல்ல வாய்ப்பை இழந்துவிட்டாய்'' என்றான்.

''அப்படி என்ன சிறப்பான வாய்ப்பு?'' என்று கேட்டேன் நான்.

''விருந்து முடிந்தவுடன் புரட்சிக் கவிஞர் இசையமுதில் உள்ள பாடல்கள் அனைத்தையும் இசையோடு பாடினார். மாணவர்கள் கேட்கக் கேட்க சலிக்காமல் பாடினார், அருமை யான இசை ஞானம். நல்ல குரல்'' என்றான் நண்பன்.

"பாரதிதாசன் குரலையா நீ பாராட்டுகிறாய்?" என்றேன் நான்.

"பேச்சைமட்டும் கேட்டுவிட்டு நீ பேசுகிறாய். பேசும் போதுதான் கரகரப்பான குரலில் பேசுகிறார். பாடும்போது குரல் அமுதமாகக் குழைகிறது" என்றான் நண்பன்.

நண்பன் சொல்லச் சொல்ல நல்ல வாய்ப்பை இழந்து விட்டோம் என்ற மனக்குறை உண்டாயிற்று.

பாட்டுப்பாடிய நிகழ்ச்சியைப்பற்றி மேலும் கூறினான் நண்பன்.

புரட்சிக் கவிஞர் புகை பிடிக்கும் பழக்கத்தைக் கண்டித்து இசையமுது நூலில் ஒரு பாட்டு எழுதியிருக்கிறார்.

பாரதிதாசன் தொடர்ந்து புகைபிடிப்பவர். அவர் அந்தப் பாடலைப் பாடி முடித்தவுடன் ஒரு மாணவன் எழுந்து "ஐயா, இது ஊருக்கு உபதேசமா?" என்று கேட்டான்.

"நீ கேட்டது சரிதான். நான் இந்தத் தீய பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டேன். என்னைப்போல் நீயும் கெட்டுப் போகாதே என்று சொல்கிறேன். மற்றவர்களை எச்சரிக்கை செய்ய எனக்கு உரிமையில்லையா?" என்று கேட்டார்.

மாணவர் பேசாமல் அமர்ந்து விட்டார்.

நண்பன் சொன்னான்: "அவர் கேட்பது நியாயந் தானே!"

நான் சொன்னேன்:

"நியாயந்தான்! ஆனல் அவர் தாமும் கைவிட்டுவிட்டுச் சொன்னால் அந்த நியாயம் வலுவான நியாயமாகும்!" என்றேன்.

"அடுத்த முறை நாம் இந்தக் கருத்தை அவரிடம் கூற வேண்டும்" என்றான் நண்பன்.

*    *    *

முருகு சுப்பிரமணியம் திருமணத்திற்குப் புரட்சிக் கவிஞர் வந்திருந்தார். முருகு சுப்பிரமணியம் தம் திருமண நினைவாக விருந்து என்று ஒரு சிறிய புத்தகத்தை அச்சிட்டு, திருமணத்திற்கு வந்தவர்களுக்கு வழங்கினார்.

என் கவிதைகள் ஐந்தும், மு. அண்ணாமலை கவிதைகள் ஐந்தும் அடங்கிய சிறு நூல் தான் விருந்து. இந்த நூலுக்கு அறிஞர் அப்பாத்துரையார் அணிந்துரை வழங்கியிருந்தார். திருமணத்திற்குப் பிறகு பாரதிதாசன் ஆத்தங்குடி வந்திருந்த போது, பாரதிதாசனிடம் இந்த நூலைக் கொடுத்தோம். 'ஐயா, இந்தக் கவிதை நூலைப்பற்றிய தங்கள் கருத்தை' எழுதிக் கொடுத்தால் எங்களுக்கு ஊக்கம் வளரும் என்றோம்.

பாரதிதாசன் உடனே ஒரு அகவல் எழுதினார். அந்த அகவலில் எங்கள் கவிதைகளைப் பாராட்டினார். முடிவில்

இளங் கவிஞர்தாம் இருவரும்
உளம் பெரிதாகி உவப்புற வாழ்கவே!

என்று வாழ்த்தினார்.

ஒரு பெருங் கவிஞரின் பாராட்டைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சி எங்கள் இதயத்தில் கூத்தாடியது.

* * *

ஆத்தங்குடியில் நான் திராவிடர் கழகம் ஒன்று தொடங்கினேன். பெரியாருக்குக் கடிதம் எழுதி அவருடைய வாழ்த்துப் பெற்றேன். பெரியார் எனக்கு 25 ரசீதுகள் கொண்ட சந்தாப் புத்தகம் ஒன்று அனுப்பியிருந்தார். உறுப்பினர் கட்டணம் நான்கணா. (25 காசு) அதில் இரண்டணா கிளைக் கழகத்துக்கு. ஓரணா மாவட்டக் கழகத்துக்கு. ஓரணா தலைமைக் கழகத்துக்கு.

நான் 25 உறுப்பினர்கள் சேர்த்து கழகச் சட்ட விதிப்படி மாவட்டக் கழகத்துக்கும் தலைமைக் கழகத்துக்கும் உரிய தொகைகளை ஒரு ரூபாய் ஒன்பதணா வீதம் அனுப்பி வைத்தேன்.

25 உறுப்பினர்கள் சேர்த்தாயிற்று. கிளைக் கழகம் ஒன்று தொடங்க வேண்டும்.

அதற்கு ஓர் இடம் வேண்டும். திராவிடர் கழகம் என்றால் யாரும் இடம் கொடுக்க மாட்டார்கள். சாமி இல்லை என்று சொல்லுகிற கட்சி—இடங் கொடுத்தால் பாவம்- அது மட்டு மல்ல இடங் கொடுப்பவரையும் தூற்றத் தொடங்கி விடுவார்கள்.

இரண்டொரு பெரியவர்களிடம் போய்க் கேட்டபோது, "ஒழுங்காப் படிங்கடா. சாமி இல்லை பூதம் இல்லை என்று கெட்டுப் போகாதீங்கடா" என்று பதில் வந்தது.

ஆத்தங்குடி சிவன் கோயில் மிக அழகானது. அதன் எதிரில் உள்ள ஊருணி (குடி தண்ணீர்க் குளம்) கூட மிக அழகானது. சிவன் கோவில் எதிர் வாடையில் ஒரு பெரிய வீடு. அதன் சொந்தக்காரர் காசி அய்யா.

காசி அய்யா குடும்பத்தினர் சிவன் கோயில் பக்கத்தில் வேத பாடசாலைக்கு என்று ஒரு கட்டிடம் கட்டிவிட்டிருந் தார்கள். அதில் பத்துப் பிராமணச் சிறுவர்களுக்கு ஒரு வாத்தியார் வைத்து சாப்பாடு போட்டு வேதம் படிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். இது பரம்பரைத் தருமமாக நடந்து கொண்டிருந்தது.

அந்தக் காசி அய்யா என்னிடம் மிகவும் அன்புடையவர். எப்போது பார்த்தாலும் "தம்பி, தம்பி" என்று அழைத்து நலம் விசாரிப்பார்.

அவருடைய பெரிய மாளிகையின் முன் புறத்தில் கார் நிறுத்துவதற்கென்று இரண்டு அறைகள் (Shed) இருந்தன.

ஒரு காலத்தில் கார் வைத்திருந்தார்கள். ஒரு அறையில் கார் நிற்கும்; மற்றொன்றில் மாட்டு வண்டி நிற்கும்.

நான் குறிப்பிடுகின்ற காலத்தில் அவர்களிடம் காரும் இல்லை; மாட்டு வண்டியும் இல்லை. இரண்டு அறைகளும் பூட்டியே கிடந்தன.

நான் ஒரு நாள் காசி அய்யாவை அணுகினேன். ''ஐயா, நாங்கள் ஒரு சங்கம் தொடங்கி யிருக்கிறோம். அதற்கு ஓர் இடம் வேண்டும். கார் நிறுத்துகின்ற இடத்தைக் கொடுத்தால் ஏதாவது வாடகை கொடுத்துவிடுகிறோம்'' என்று கேட்டேன்.

''சங்கம் என்றால் என்ன?'' என்று காசி அய்யா விளக்கம் கேட்டார்.

''மாணவர்கள் அங்கு ஒன்றாகக் கூடுவோம். நூல் நிலையம் வைத்துப் புத்தகங்கள் படிப்போம். பத்திரிகைகள் வரவழைத்துப் படிப்போம். கூட்டம் போட்டுப் பேசுவோம்.''

''நல்ல காரியம்தான். மாதம் 5 ரூபாய் வாடகை கொடுத்துவிடு. நல்ல நாளாகப் பார்த்து சாவி வாங்கிக் கொண்டுபோ'' என்றார் காசி அய்யா.

''நாங்கள் சிறுவர்கள். ஐந்து ரூபாய் கொடுக்க முடியாது, இரண்டு ரூபாய் தருகிறோம்'' என்றேன் நான்.

''சரி பரவாயில்லை. இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சீட்டுப் போடக் கூடாது. கூட்டம் போட்டு வெள்ளைக்காரனை எதிர்த்துப் பேசக் கூடாது'' இப்படிப் பல கட்டுப்பாடுகளைச் சொல்லி காசி அய்யா இடத்தைக் கொடுத்தார்.

இடம் பிடித்தாயிற்று. திராவிடர் கழகம் தொடக்கவிழா ஒன்று நடத்த வேண்டும். இதற்கு யாராவது ஒரு தலைவர் வந்தால் நன்றாய் இருக்குமே என்று எண்ணினேன்.

பாரதிதாசன் அப்போது காரைக்குடியில் இருந்தார்.

திராவிடர் கழகத்தின் மாவட்டச் செயலாளர் இராம சுப்பையா. புரட்சிக் கவிஞர் அவருடைய வீட்டில் தங்கி யிருந்தார். சுற்றியுள்ள ஊர்களில் சுயமரியாதைப் பிரசாரம் செய்யப் போவதும், இராம சுப்பையா அவர்கள் வீட்டில் தங்கியிருப்பதுமாக இருந்தார்.

ஏற்கெனவே யுள்ள அறிமுகத்தை வைத்து பாரதி தாசனையே அழைத்துவந்து திராவிடர்கழகத் தொடக்க விழாவை நடத்துவதென்று முடிவு செய்தேன்.

ஒருநாள் கூட்டம் நடத்த எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு, கழக உறுப்பினர்களை யெல்லாம் மாலையில் கூட்டம் நடத்தத் தயாராக இருக்கச் சொல்லிவிட்டு நான் காரைக் குடிக்குச் சென்றேன்.

காரைக்குடிக்குப் புறப்படு முன் என் தாயாரிடம் சென்றேன்.

"ஆத்தா, இன்று எங்கள் சங்கத்தில் கூட்டம் போட்டிருக் கிறோம். காரைக்குடியிலிருந்து ஒரு வாத்தியார் பேச வருகிறார். அவருக்கு மத்தியானம் விருந்து வைக்க வேண்டும். நம் வீட்டிற்குக் கூட்டி வரவா?" என்று கேட்டேன்.

என் தாயார் புதிதாகவரும் தலைவருக்கு விருந்து சமைக்க ஒப்புக் கொள்வார்களோ, மாட்டார்களோ என்ற ஐயம் எனக்கிருந்தது. ஒருவேளை ஒப்புக்கொள்ளாவிட்டால், யாராவது ஒரு அய்யர் வீட்டில் ஏற்பாடு செய்யலாம் என்ற துணிச்சல் இருந்தது.

வீட்டிற்குச் சில சமயம் பார்ப்பன விருந்தாளிகள் வருவார்கள். நம் வீட்டில் அவர்கள் சாப்பிட மாட்டார்கள். ஊரில் உணவு விடுதி (ஓட்டல்) எதுவும் கிடையாது. இந்த நிலையில் குறிப்பிட்ட சில அய்யர் வீடுகளில் சென்று ஆள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் கொடுத்துவிட்டால்

அப்பளம் பாயசத்தோடு விருந்து தயாரித்து விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு அய்யர் வீட்டில் பாரதிதாசனுக்கு விருந்து ஏற்பாடு செய்யலாம் என்று எண்ணியிருந்தேன். என் தாயார். "நல்லாக் கூட்டி வா. நான் சமைத்து வைக்கிறேன்" என்று கூறினார்கள்.

கூடவே, "அவர் என்ன சாதி?" என்று கேட்டார்கள்.

சாதியைப்பற்றி ஏன் விசாரிக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு வேளை வருகிறவர் அரிசனராக இருந்தால், என் தாயார் விருந்து வைக்க ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அப்படியே ஒப்புக் கொண்டாலும், வீட்டுக்குள் கூட்டிவர அனுமதிக்க மாட்டார்கள். வெளித் திண்ணையிலேயே சோறு போட்டு அனுப்பி விடுவார்கள்.

"முதலியார்" என்று பதில் அளித்தேன்.

"அப்படியானால் சைவமாகத்தான் சமைக்க வேண்டும்" என்றார்கள்.

விருந்துக்கு ஏற்பாடு செய்த மனநிறைவோடு, காரைக் குடிக்குப் புறப்பட்டுச் சென்றேன். இராம சுப்பையா அவர் களின் வீட்டை அடைந்தேன்.

புரட்சிக் கவிஞர் முகப்பிலேயே உட்கார்ந்திருந்தார்.

நேரே அவரிடம் சென்றேன். ஆத்தங்குடியில் திராவிடர் கழகம் தொடக்கி வைக்க வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

"தொடர்ந்து கூட்டங்களுக்குப் போய் வந்திருக்கிறேன்' இன்றைக்குத்தான் ஓய்வெடுக்கலாம் என்று இருக்கிறேன். இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம்" என்றார்,

"இன்று எங்களுக்கு விடுமுறை. எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன். நண்பர்கள் ஆவலாய் இருப்பார்கள். இன்றே வர வேண்டும்'' இது என்னுடைய கெஞ்சல்.

''எனக்கு ஓய்வு வேண்டாமா?'' இது புரட்சிக் கவிஞரின் கேள்வி.

எங்கள் உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த தோழர் இராம சுப்பையா குறுக்கிட்டார்.

''தம்பி, மிகவும் ஆர்வமாய் இருக்கிறார். அவருக்கு உற்சாகம் கொடுக்க வேண்டியது நமது கடமை. ஐயா, இன்று ஆத்தங்குடி போய் வந்து விடுங்கள் நாளை ஓய்வெடுத்துக் கொள்ளலாம்'' என்றார்.

''நாளை திருப்பத்தூர்க் கூட்டம் இருக்கிறதே?'' இது புரட்சிக் கவிஞர் பதில்.

''திருப்பத்தூரில் எத்தனையோ கூட்டங்கள் நடத்தி விட்டோம். ஆத்தங்குடியில் இது முதற் கூட்டம். இளைஞர் களை ஏமாற்றம் அடையச் செய்யக் கூடாது. திருப்பத்தூர்க் கூட்டத்தை வேறொரு நாள் வைத்துக் கொள்ளலாம்.''

இராம சுப்பையா எனக்கு ஆதரவாகப் பேசிப் புரட்சிக் கவிஞரை ஒப்புக்கொள்ளச் செய்தார்.

''சரி மாலையில் புறப்படலாம்'' என்றார் கவியரசர்.

''பகல் சாப்பாடு எங்கள் வீட்டில் தயாராகிறது. மாலையில் கூட்டம் முடிந்ததும் இரவு உணவுக்குப் பிறகு காரைக்குடியில் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன்'' என்று கூறினேன். இராம சுப்பையாவையும் அழைத்தேன்.

இயக்க வேலைகள் நிறைய இருப்பதால், வர இயலவில்லை என்று கூறிவிட்டார் அவர்.

பதினொருமணிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டு, காரைக்குடியில் இருந்த அச்சகம் ஒன்றுக்குச் சென்றேன்.

கூட்ட அறிக்கைகள் ஆயிரம் உடனடியாக அச்சிட்டுத் தர வேண்டினேன். ஐந்து ரூபாய் வாங்கிக் கொண்டு இரண்டு மணி நேரத்தில் அச்சிட்டுக் கொடுத்தார்கள்.

அதை வாங்கிக் கொண்டு கல்லுக்கட்டிக்குச் சென்றேன். கல்லுக்கட்டி காரைக்குடியின் மையப்பகுதி. இதுதான் கடைத் தெருவும்கூட கல்லுக்கட்டியின் ஒரு மூலையில் குதிரைவண்டி நிலையம் இருந்தது. அங்கு ஒரு குதிரை வண்டியை வாடகை பேசிக் கொண்டு இராம சுப்பையா வீட்டுக்கு வந்தேன்.

புரட்சிக் கவிஞர் குதிரை வண்டியில் ஏறி அமர்ந்தார். வண்டிக்காரனுக்கு அருகில் முன்புறம் அவர் இருந்தார். நான் பின்புறம் அமர்ந்து கொண்டேன். இராம சுப்பையா வழியனுப்ப வண்டி புறப்பட்டது.

காரைக்குடியில் வண்டி செல்லும் வழியெல்லாம், பின்னால் இருந்தபடி சில துண்டறிக்கைகளை எடுத்துத் தெருவில் வீசிஎறிவேன். வழியில் போவோர் வருவோர் அதை எடுத்துப் படிப்பார்கள்.

காரைக்குடியிலிருந்து ஆத்தங்குடி போகும் வழியில் ஒவ்வொரு கிராமத்திலும், துண்டறிக்கைகளை வீசிக்கொண்டு வந்தேன்.

ஒவ்வொரு ஊரிலும் வழியில் போவோர் வருவோர் அந்தத் துண்டறிக்கைகளை எடுத்துப் படிப்பார்கள்.

கழனிவாசல், பாதரக்குடி, துளாவூர், குன்றக்குடி, பலவான்குடி இப்படி ஒவ்வொரு ஊரிலும் துண்டறிக்கைகள் போட்டுக் கொண்டே வந்தேன்.

குன்றக்குடி மலையடிவாரத்தைக் கடக்கும்போது துண்டறிக்கைகளை வீசி எறிந்தேன். அவை காற்றில் வண்டிக்கு முன்புறமாகப் பறந்து சென்று சிதறி விழுந்தன. சிறுவர்களும் பெரியவர்களும் எடுத்துப் படித்தார்கள்.

புரட்சிக் கவிஞர் வண்டியை நிறுத்தச் சொன்னார்.

"ஏன்?" என்றேன்.

"நாம் போகிற வழியெல்லாம் எவனோ துண்டறிக்கை போடுகிறானே? என்ன செய்தி? பார்க்கலாம்" என்ற கவிஞர் வழியில் அறிக்கை எடுத்த சிறுவன் ஒருவனை அழைத்து துண்டறிக்கையை வாங்கிப் பார்த்தார்.

"அடே! நம்ம செய்தி! யார் இங்கெல்லாம் போடுகிறார்கள்?" என்று கேட்டுக் கொண்டே வெளியில் எட்டிப் பார்த்தார்.

"நான்தான்!" என்று உள்ளேயிருந்து குரல்கொடுத்தேன். திரும்பிப் பார்த்தார்.

என் கையில் ஒருகட்டுத் துண்டறிக்கைகள் இருந்ததை அப்போதுதான் கவனித்தார்.

"அட இவனே! என்னையும் வைத்துக் கொண்டு நீ துண்டறிக்கை போடுகிறாயே! பார்க்கிறவன் என்ன நினைப்பான். நானே துண்டறிக்கை போட்டுக்கொண்டு போவதாக நினைப்பானே!" என்று சலிப்பாகக் கூறினார்.

"பயப்படாதீர்கள். நீங்கள் தான் பாரதிதாசன் என்று இந்த ஊர்மக்களுக்கு இப்போது தெரியாது. அதனால் நீங்களே சுயவிளம்பரம் செய்து கொள்வதாக நினைக்க மாட்டார்கள்" என்றேன் நான்.

இப்படியாக வழியெல்லாம் விளம்பரம் செய்துகொண்டே ஆத்தங்குடிக்கு வந்து சேர்ந்தோம். ஆத்தங்குடியில் முத்துப் பட்டணம் என்பது ஒரு சிறுபகுதி. அந்தப் பகுதியில் இருந்த ஒரு பழைய வீடு எங்கள் வீடு.

வீட்டிற்குப் புரட்சிக் கவிஞரை அழைத்து வந்தேன். சிறிது நேரத்தில் உணவு தயாராக இருப்பதாக என் அன்னையார் கூறினார்கள்.

வெளியூர் முதலியாருக்கு என்று என் அன்னையார் அருமையான சைவவிருந்து தயாரித்து வைத்திருந்தார்கள்

சாம்பார், சூப்பு, ரசம், பருப்பு நெய், அப்பளம், பாயசம், ஐந்துவகைக் கறிகள் இப்படிச் சிறப்பான விருந்தாக அமைந்த இந்த உணவை, பாவேந்தர் சரியாகச் சாப்பிடவில்லை. பெயருக்குச் சிறிது சாப்பிட்டுவிட்டு எழுந்துவிட்டார்.

சமையலில் ஏதேனும் குறையா என்று அன்னையார் என்னை வினவ, அவர் எப்பொழுதுமே கொஞ்சமாகத்தான் சாப்பிடுவார் என்று நான் சொல்லி வைத்தேன்.

சாப்பிட்ட பிறகு சிறிது நேரம் சாய்ந்து ஓய்வு எடுத்துக் கொண்ட பாரதிதாசன் இரண்டு மணியளவில் என்னையழைத்தார்.

"கூட்டம் எத்தனை மணிக்கு?" என்று கேட்டார்.

"ஐந்தரை மணிக்கு" என்றேன்.

"முன்னாலேயே வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்றார்.

"ஐந்தரை மணிக்குத்தான் அறிவித்திருக்கிறோம். அதற்கு முன்னால் யார் வருவார்கள்?" என்றேன் நான்.

வீட்டில் அடுக்களைப் பகுதியிலே என் தாயார், தமக்கையர் தங்கை ஆகியோர் இருந்தார்கள்.

முன்பகுதியில் நானும் அவருந்தான்.

அவரோடு சரளமாகப் பேசிக் கொண்டு இருக்கக் கூடியவனல்ல நான். அதற்குரிய வயதும் எனக்கு இல்லை.

தனிமையை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பொழுதுபோவது மிகக் கடினமாக இருந்திருக்க வேண்டும். புதிதாகச் சிறைப்பட்ட புறாப்போல் துடித்துக் கொண்டிருந்தார்.

மூன்று மணியளவில் தியாகராசன் செட்டியார் எங்கள் வீட்டுக்கு வந்தார்.

''தம்பி, பாரதிதாசன் வந்திருக்கிறாராமே?'' என்று கேட்டுக் கொண்டே நுழைந்தார்.

தியாகராாசன் செட்டியார் ஆத்தங்குடியில் மிக முக்கிய மானவர். அப்போது ஒரு சிங்கம்போல் வாழ்ந்து வந்தார்.

வேட்டைக்குப் போவது

குதிரைச் சவாரி செய்வது

குதிரை வளர்ப்பது

முரடர்களிடம் சரிக்குச் சரியாக நின்று சண்டை போடுவது. எப்பொழுதும் தன்னைச் சுற்றி ஒரு வீரர் கூட்டத்தை வைத்துக் கொண்டிருப்பது. இப்படி நகரத்தார் வழக்கத்திற்கு மாறான செல்வாக்குப் பெற்றவர்.

தியாகராாசன் செட்டியார் என்று சொன்னால் திருடர்கள் ஓடி யொளிவார்கள். முரடர்கள் அடங்கி ஒடுங்கிப் போவார்கள்.

அவருடைய குதிரைச் சவுக்கு நியாயத்துக்குப் போராடும். வெற்றி தவிர அது வேறு ஒன்றைக் கண்டதில்லை.

அப்படிப்பட்ட தியாகராாசர் பாரதிதாசனைத் தேடி வந்தார்.

கவியரசரும் தியாகராசரும் சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்தார்கள்.

''தம்பி, ஐயாவை நான் எங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். இரவு சாப்பாடு எங்கள் வீட்டில். நீயும் வந்துவிடு'' என்று கூறிக் கொண்டே எழுந்தார். பாவேந்தரும் அவருடன் கிளம்பி விட்டார்.

''கூட்டம் இருக்கிறதே''' என்றேன் நான்.

''கூட்டத்திற்கு நான் அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்றார் தியாகராசர்.

எனக்குத் துணிச்சல் வந்தது.

"பாரதிதாசன் பேசும்போது யாரேனும் தகராறு செய் தால் என்ன செய்வது" என்று நான் பயந்து கொண்டிருந் தேன். இப்போது என் பயம் நீங்கிவிட்டது. தியாகராசரை எதிர்த்து ஊரில் யாரும் நிற்கமாட்டார்கள். அதனால் கூட்டம் அமைதியாக நடக்கும். இப்படி நான் என்னை ஊக்கப்படுத்திக் கொண்டேன்.

ஆத்தங்குடிச் சிவன் கோயில் ஊருணிக் கரையில் காசி அய்யா வீட்டின் எதிரில் ஒரு கொடிக் கம்பம். அந்தக் கொடிக் கம்பத்தில் காங்கிரசுக் கட்சியின் மூவண்ணக் கொடி எப்பொழு தும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கும். அந்த இடத்தில்தான் காங்கிரசுக் கூட்டங்கள் நடைபெறும். அதே இடத்தில்—மூவண்ணக் கொடியின் கீழ் தான் நாங்கள் திராவிடர் கழகத் தொடக்க விழாவும் நடத்த ஏற்பாடு செய்திருந்தோம்.

சரியாக 5-30 மணிக்கு தியாகராசர் பாவேந்தரைக் கூட்டிக் கொண்டு கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்தார்.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆறுபேர், கோனாபட்டு மாணவர்கள் 4 பேர் ஆக மொத்தம் 10 பேர் கூட்டத்திற்கு வந்திருந்தோம். மற்றவர்கள் வரவில்லை. கூட்டம் என்ன ஆகுமோ? எதிர்ப்பு ஏற்படுமோ என்று பயந்து பலர் வரவில்லை.

புரட்சிக் கவிஞர் வந்தவுடன், தியாகராசர் கூட்டத்தைத் தொடங்கலாம் என்றார்.

நாங்கள் பத்துப் பேரும் நாற்காலியின் இருபுறத்திலும் கவிஞருக்குப் பின்புறமாக நின்று கொண்டிருந்தோம்,

"யாருமே இல்லை. யாரைப் பார்த்து நான் பேசுவது?" என்று கவிஞர் கேட்டார்.

''யாரும் வேண்டியதில்லை. நீங்கள் பேசுங்கள். உங்கள் பேச்சை அருகில் வந்து கேட்க மாட்டார்கள். தொலைவில் பாருங்கள். அங்கங்கே வீட்டுதிண்ணையிலும், மரத்தடிகளிலும் நிற்கிறார்கள். அவர்கள் நிச்சயம் கேட்பார்கள். அவர்கள் மூலம் ஊர் முழுவதும் உங்கள் பேச்சுப் பரவிவிடும்'' என்று நான் கூறினேன்.

''சரி, நீங்களாவது எதிரில் வந்து உட்காருங்கள்'' என்றார்.

நாங்கள் பத்துப்பேரும் எதிரில் வந்து உட்கார்ந்தோம், கவிஞர் பேசத் தொடங்கினார்.

தன்மானக் கொள்கைகளை மிகத் தெளிவாக—மிக அமைதியாக— அறியாச் சிறுவரும் புரிந்து கொள்ளும்படியாக ஒருமணி நேரம் விளக்கமாகப் பேசினார்.

தன்மானக் கருத்துக்களை அவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் அதுவரை யாரும் எடுத்துப் பேசியதாக நான் நினைக்கவில்லை.

பொருளைத் திட்டவட்டமாக வகுத்துக் கொண்டு, பச்சை மரத்தில் ஆணி யடிப்பதுபோல் மனத்தில் பதியும்படி புதுமைக் கொள்கைகளை அன்று விளக்கிப் பேசியதுபோல், அவரே கூட அதற்கு முன்னும் பின்னும் பேசியிருக்க மாட்டார் என்றே நான் எண்ணுகிறேன், அவ்வளவு சிறப்பாக அமைந்திருந்தது அவருடைய ஆத்தங்குடிப் பேச்சு.

கூட்டம் முடிந்தவுடன் தியாகராசர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றோம். தியாகராசர் வீட்டில் அருமையான புலால் விருந்து கவிஞருக்கென்று சிறப்பாகத் தயாரிக்கப் பட்டிருந்தது.

நான் அப்பொழுது முழுச் சைவம். ஓர் ஓரத்து இலையில் மிகக் கவனமாக அசைவப் பொருள்கள் பரிமாரவிடாமல் தடுத்துக் கொண்டு சாப்பிட்டேன்.

என்னையும் எனது சைவத்தையும் கிண்டல் செய்து கொண்டே கவிஞர் வயிறார உணவுண்டார்.

அவருடைய உணவுப் பழக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் எங்கள் வீட்டில் சைவ விருந்து வைத்தது குறித்து வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன் நான்.

மறுநாள் கவிஞரை ஒரு மாட்டுவண்டியில் ஏற்றிக் கொண்டு, தியாகராசர் வேட்டைக் காட்டுக்கு அழைத்துச் சென்றார். பறவைகளையும் விலங்குகளையும் வேட்டைத்துப் பாக்கியால் சுட்டு எடுத்துக் கொண்டு வந்து கவிஞருக்கு விருந்து வைத்தார்.

ஆத்தங்குடித் திராவிடக் கழகத்திற் கென்று நூல்நிலையம் ஒன்று வைத்துக் கொள்ளுங்களேன். குடியரசு இதழுக்கு உறுப்பினர் ஆகுங்கள். குடியரசு வெளியீடுகள் அறுபது புத்தகங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் இளைஞர்களும் படிக்க வேண்டும். உங்கள் நூல்நிலையத்தில் அவை இருக்க வேண்டும். என்று கூறிய பாவேந்தர், தொடர்ந்து நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதைக் குடியரசு அலுவலகத்துக்கு அனுப்புங்கள். பாதிவிலைக்கு நூல்கள் வந்து சேரும் என்று கூறிக் கடிதம் எழுதிக் கொடுத்தார். அறுபது புத்தகங்களுமே மலிவுப் பதிப்புகள். அவற்றின் மொத்த விலையே நாற்பது ரூபாய்தான். எங்களுக்கு அவை இருபது ரூபாய்க்குக் கிடைத்தன.

அவை யனைத்தையும் ஆத்தங்குடியில் இருந்த இளைஞர்கள் பலர் படித்தனர். சுயமரியாதை எண்ணங்கள் விதைக்கப் பட்டன. நாத்திக நோக்கு மலர்ந்தது. மற்றவர்கள் மாறினார்களோ இல்லையோ நான் நாத்திகனாகி விட்டேன்.

இவ்வாறு ஏழு நாட்கள் தியாகராசர் வீட்டில் தங்கி வேட்டைக்குச் செல்வதும் நல்ல விருந்து உண்பதுமாகக் கழித்தார் கவிஞர் பாரதிதாசன்.

ஒருநாள் நானும் கவிஞர் மு. அண்ணாமலையும் எழுதி முருகு சுப்பிரமணியம் அவர்கள் தமது திருமண நாளில் அச்சிட்டு வெளியிட்ட 'விருந்து' என்ற தலைப்புள்ள சிறு கையடக்கப் பதிப்பைக் கவிஞரிடம் காட்டி வாழ்த்துமாறு வேண்டினோம்.

நூலை முற்றும் படித்துப் பார்த்த கவிஞர் அப்பொழுதே ஒருதாள் கொண்டு வரச் சொல்லி; எங்களுக்கு வாழ்த்து ஒன்று எழுதினார்.

ஆசு கவியாக அவர் எழுதிய அந்த உடனடிக் கவிதை இது தான்.

முருகு வள்ளி திருமண நினைவாய்
அரிதின் இயன்ற விருந்தெனும் கவிதைநூல்
கண்டேன்; மகிழ்ச்சி கொண்டேன்; என் எனின்
தண்டமிழ் அன்னை தன்னை வாழ்த்தியும்
பகலவன் வரவு பகர்ந்தும் மற்றவன்
அகலும் அழகை அறைந்தும் தோழர்
நாச்சியப்பர் நனிசிறக் கின்றார்.
தாமரைக் குமரியில் தனிச்சிறப் படைந்து
மாமலர் வண்டின் வகையுரைத்தலில்
இளங்கவி தானென இலகுகின்றார்.

* * *

சிரித்த முல்லை விரித்த பண்பினால்
பெருத்த காவிரி பேசிய பண்பினால்
அன்னை நாட்டை அழகு செய்யுமோர்

தென்னை எழிலைப் பன்னிய பண்பினால்,
கடலின் காட்சியைக் கழறிய பண்பினால்
கடிதில் தோழர் கண்டார் சிறப்பே!
அன்னார் பெயர்தான் என்னெனில் அறைவேன்
நன்னர் அண்ணாமலை என்று நவின்றேன்

* * *

இளங்கவிஞர்தாம் இருவரும்
உளம் பெரிதாகி உவப்புற வாழ்கவே!

ஆத்தங்குடி
30-10-1945

பாரதிதாசன்

# அழகப்பா கல்லூரியில்

பர்மாவில் எட்டாண்டுகள் இருந்தபின் தமிழகம் திரும்பினேன். சென்னையில் நான் பவழக்காரத் தெரு நகர விடுதியில் தங்கியிருந்தேன், நான் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு கவிஞர் நாக முத்தையா என்னை வந்து பார்த்தார். முத்தையா என் பள்ளித் தோழர். பொன்னியில் பாரதிதாசன் பரம்பரையில் அறிமுகமானவர். பாரதிதாசனிடம் பெரு மதிப்புக் கொண்டவர். என்னிடம் மிகுந்த அன்பும் நட்புறவும் கொண்டவர். நாக முத்தையா என்னைவிட ஒரு வயது குறைந்தவர். ஆனால் அவர் தொடக்க முதல் வாடா போடா என்று பேசுவதும் நான் அவரை வாருங்கள் இருங்கள் என்று பணிவோடு பேசுவதும் வழக்கம்.

பர்மாவிலிருந்து வந்த நான் திரும்பிப் போக விசா எடுத்துக் கொண்டு தான் வந்திருந்தேன். ஆனால் என்னைத் திரும்பிப் போகவிடாமல் சென்னையிலேயே நிலையாகத் தங்க வைக்க நாக முத்தையா பெரும்பாடு பட்டார்.

வாரம் ஒரு முறையாவது என்னை வந்து பார்க்காமல் இருக்கமாட்டார், எப்போதும் என்னுடன் இருப்பதை மிகவும் விரும்புவார்.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணியாற்றிய திரு முத்தையா மிக இளம் வயதில் இறந்து விட்டார்.

சென்னையில் நாக முத்தையாவை சந்தித்த நான் திரும்பவும் சென்னை வருவதாகக் கூறி விட்டு சொந்த ஊரான முத்துப்பட்டணம் போயிருந்தேன்.

அங்கு இருந்த போது காரைக்குடி அழகப்பா கல்லூரியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் மாணவர் மன்றத்தின் ஆண்டுவிழாக் கவியரங்கம் நடப்பதாக அழைப்பு வந்தது. புரட்சிக் கவிஞரைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அந்தக் கவியரங்கிற்கு நான் சென்றேன்.

கோனாபட்டிலும் காரைக்குடியிலும், பொன்னி யிதழில் துணையாசிரியராகப் பணியாற்றிய போது புதுக்கோட்டையிலும், பிறகு பர்மா புறப்பட்டுச் செல்லும் போது சென்னையிலும் பாரதிதாசனை சந்தித்திருக்கிறேன். பேசியிருக்கிறேன். இடையில் எட்டாண்டுகள் தமிழகத்தில் நான் இல்லை. மீண்டு வந்திருக்கிறேன்,

பாரதிதாசன் என்னை நினைவில் வைத்திருப்பாரா? சொன்னால் நினைவு படுத்திக் கொள்வாரா? மறந்து போயிருப்பாரா? புதிதாக அறிமுகம் செய்து கொள்ள வேண்டி வருமா? இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்துக் கொண்டே காரைக்குடிக்குச் சென்றேன். அழகப்பா கல்லூரியில் விழாப் பந்தலுக்குச் சென்றேன்.

மேடையின் முன் முதல் வரிசையில் ஓர் ஓரத்தில் சில நண்பர்களுடன் அமர்ந்தேன், புரட்சிக் கவிஞர் வந்தவுடன் கவியரங்கம் தொடங்கும் என்றார்கள். கால்மணி நேரம் காத்திருந்தேன்,

அவரை அழைத்து வரும் திசை நோக்கி விழிகள் பூத்திருந்தன.

அதோ புரட்சிக் கவிஞர் வந்துவிட்டார்.

அருகில் செயலாளர்கள் சூழ்ந்துவர சிங்க நடையுடன் நிமிர்ந்து பார்த்தபடி மேடையை நோக்கி வந்து கொண்டிருந்த அந்தத் தோற்றப் பொலிவைக் கண்டபடி, மெய் மறந்து அமர்ந்திருந்தேன். பக்கத்தில் இருந்தவர்களனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்ததைக் கூட கவனிக்காமல் அமர்ந்திருந்தேன்.

மேடையை நோக்கி வந்து கொண்டிருந்த பாவேந்தர் கூட்டத்தின் பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பினார். மேடைக்குச் செல்லாமல் என்னை நோக்கி வந்தார். நான் எழுந்து நின்றேன். என்னை நெருங்கினார். "அட இவனே! எப்பொழுது வந்தாய்?" புரட்சிக் கவிஞர் கேட்டார்.

பெயர் நினைவுக்கு வராதபோது அவர் விளிப்பது 'அட இவனே' என்று தான்.

"ஒரு மாதமாகிறது அய்யா',

"சிங்கப்பூருக்குத்தானே போயிருந்தாய்?"

"இல்லை. இரங்கூனுக்கு."

"சரி கூட்டம் முடிந்தவுடன் போய் விடாதே. என்னைப் பார்த்தபின் போகலாம். உன்னுடன் நிறையப் பேச வேண்டும்"

புரட்சிக் கவிஞர் என்னை நன்றாக நினைவு வைத்திருக் கிறார்.

இந்த எண்ணமே இன்பப் பெருமிதத்தை யுண்டாக்கியது.

கவியரங்கம் நடந்தது. புரட்சிக் கவிஞரின் முன்னுரை முடிப்புரை இலக்கிய முழக்கமாக ஒலித்தது.

இளங்கவிஞர்களுக்குக் கவிதை பற்றிய தெளிவான விளக் கம் கிடைத்தது. தன்மான உணர்வும் பகுத்தறிவுக் கருத்தும் விளக்கத்தோடு விளக்கமாக எழுந்தன.

கூட்டம் முடிந்ததும் புரட்சிக் கவிஞர் மேடையை விட்டு இறங்கி என்னிடம் வந்தார்.

தம்மோடு வந்து உணவருந்துமாறு பணித்தார். சுற்றிச் சூழ்ந்து வந்த விசிறிகளிடம் என்னைச் 'சிறந்த கவிஞர்' என்று அறிமுகப்படுத்தினார்.

நலம் விசாரித்தார், எட்டாண்டு பர்மா வாழ்க்கை பற்றி விவரம் கேட்டார்.

என்னைச் சந்தித்ததிலே அவர் தம் பாசவுணர்வு வெளிப் பட்டது. எனக்கோ தமிழ்நாட்டின் பெருந்தலைவர் கவிஞர், என்னை நினைவு வைத்துக் கொண்டு பேசுகின்றார் என்ற பெருமித உணர்வு நெஞ்சில் நிறைந்திருந்தது.

# சென்னையில் பாரதிதாசன்

பொன்னி இதழில் நான் துணை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

ஏழு ஆண்டுகள் நிகழ்ந்த இரண்டாவது உலகப் பெரும் போரில், பர்மா சப்பானியரிடம் சிக்கிக் கொண்டது. என் தந்தையார் பர்மாவில் சிக்கிக் கொண்டிருந்தார். சப்பானியர் பர்மா மலேயாவிலிருந்து விரட்டப் பட்டதும் சப்பானில் அமெரிக்கர்கள் முதன்முதலில் அணுக்குண்டு போட்டதும் பெரிய வல்லரசாகத் திகழ்ந்த சப்பானியரை அடக்கி ஒடுக்கி அடிமை கொண்டதும் உலக வரலாறு தெரிந்தவர்களுக்கு நினைவிருக்கும்,

கடிதப் போக்குவரத்தே இல்லாதிருந்த பர்மாவுடன் உலகப்போர் முடிந்தபின் கடிதப் போக்குவரவு தொடங்கியது, கப்பல் போக்கு வரவும் தொடங்கியது.

தந்தையார் இருக்கும் பர்மிய நாட்டுக்குப் போக விரும்பினேன். தந்தையாருக்கு எழுதினேன்.

வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் பர்மாவுக்குச் செல்ல பாஸ்போர்ட் வேண்டியதில்லை. பர்மாவும் இந்தியாவும் தனித் தனி உரிமை நாடுகளாகிவிட்டபடியால், ஒரு நாட்டிலிருந்து ம்ற்றொரு நாட்டிற்குச் செல்ல, இரு நாட்டு அரசுகளிடமிருந்

தும் அனுமதி வாங்க வேண்டும். நான் அனுமதி வாங்கி அனுப்பும்படி எழுதிய கடிதத்திற்கு தந்தையார் அவர்கள் தமிழகத்திலேயே ஒரு வேலை தேடிக் கொள்ளும்படி எழுதியிருந்தார்கள்.

ஒன்றை நினைத்துவிட்டால் அதை நினைத்தபடி முடிப்பது என் இயல்பாக இருந்தது.

தந்தையார் அனுமதி வாங்கி அனுப்பப் போவதில்லை என்று நன்கு தெரிந்து விட்டது.

இருந்தாலும், போயே தீர்வதென்று முடிவு செய்தேன்.

இரங்கூனில் இருந்த உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதினேன். அவர் எனக்கு 'விசா' எடுத்து அனுப்பினார்.

தாயாரிடம் வழிச்செலவுக்குப் பணம் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டேன்.

சென்னை வந்தேன். பாஸ்போர்ட் விசா போன்றவற்றைப் பதிவு செய்து கொண்டு கப்பல் சீட்டுக்கு முயன்றேன்.

போருக்கு முன் வாரம் இருமுறை கப்பல் போக்குவரத்து இருந்தது. போருக்குப் பிறகு மாதம் ஒருமுறை தான் கப்பல் போய் வந்தது. நான் புறப்பட்ட சமயம் அந்த மாதம் புறப்பட வேண்டிய சோனாவதி என்ற கப்பல் அந்தமாதம் பழுது பார்க்கப் போயிருப்பதால் அடுத்த மாதம்தான் வரும் என்று கப்பல் நிறுவனத்தார் கூறிவிட்டார்கள்.

என்னுடைய விசாவில் குறிப்பிட்டிருந்த காலத்திற்குள் என்னால் புறப்பட முடியாதென்ற நிலை ஏற்பட்டது. மீண்டும் பர்மிய அரசாங்கத்திடம் விண்ணப்பித்து விசாவைப் புதுப்பிக்கலாம் என்று கூறினார்கள்.

கல்கத்தா சென்றால் நாள்தோறும் செல்லும் வானூர்தியில் செல்லலாம் என்று நகர விடுதியில் இருந்தவர்கள் வழி காட்டினார்கள்.

சென்னையிலிருந்து இரங்கூனுக்குக் கப்பல் கட்டணம் ரூ 60/-

ஆனால் கல்கத்தா செல்ல இரயிலுக்கு ரூ 30/-ம் கல்கத்தாவிலிருந்து இரங்கூனுக்கு வானூர்திக்கு ரூ 250/-ம் செலவாகும் என்றார்கள். முன்வைத்த காலைப் பின்வாங்கலாகாதென, கல்கத்தா போய் இரங்கூன் போவதென்று முடிவு செய்தேன்.

மறுநாள் இரயிலில் புறப்பட வேண்டும். அன்று காலை ஏதோ வேலையாகத் தம்பு செட்டித் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தேன்.

எதிரில் புரட்சிக் கவிஞர் நாலைந்து தோழர்களுடன் சிங்க ஏறுபோல் நடந்து வந்து கொண்டிருந்தார்.

நெருங்கி வந்ததும் "அய்யா வணக்கம்!" என்று கை குவித்தேன்.

"அட இவனே! இங்கே சென்னைக்கு என்ன வேலையாய் வந்தாய்?" என்று கேட்டார் கவிஞர்.

"இரங்கூனுக்குப் போகிறேன் அய்யா" என்றேன்.

"இரங்கூனா? இங்கிருந்து எவ்வளவு தொலைவிருக்கும்?" என்று கேட்டார் கவிஞர்.

"ஆயிரம் மைல்" என்றேன்,

"எப்பொழுது திரும்பி வருவாய்?"

"மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் ஆகலாம்.'

"அவ்வளவு நாள் ஆகுமா? அப்படியானால் தமிழெல்லாம் மறந்து போகுமே!" என்று கவலைப்பட்டார் பாவேந்தர்.

"இல்லை அய்யா! அங்கே தமிழர்கள் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். பெரும்பாலும் தமிழில் தான் பேசுவேன்."

"இருந்தாலும் நீ கவிஞன். அங்கு தொழில் ஈடுபாட்டில் இலக்கியம் மறந்து போகுமே!"

சிந்தனையில் ஆழ்ந்தார்.

''ஒன்று செய். என்னோடு வா. நல்ல இலக்கிய நூல்களின் பட்டியல் ஒன்று தருகிறேன். அவற்றை வாங்கிக் கொண்டு போ. ஓய்வு நேரத்தில் அவற்றைப் படி. தமிழை மறக்காமல் இருக்கலாம்'' என்று கூறித் தான் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

தம்புச் செட்டித் தெருவில் ஒரு நண்பர்-இயக்கத் தோழர் வீட்டில் தங்கி யிருந்தார்.

என்னை அழைத்துச் சென்று ஒரு தாள் கொடுத்துப் பட்டியல் எழுதச் சொன்னார். இருபது இலக்கிய நூல்களின் பட்டியல் அது,

''நீ தங்கியிருக்கும் பவழக்காரத் தெருவில், உங்கள் நகர விடுதிக்குப் பக்கத்திலேயே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இருக்கிறது. அங்கே இந்த நூல்கள் கிடைக்கும். இருபது ரூபாய்க்குள் தான் இருக்கும். நான் அனுப்பியதாகச் சொல். ஏதேனும் கழிவு நீக்கித் தரலாம், வாங்கிச் சென்று பர்மாவில் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் திரும்பத் திரும்பப் படி. உன் கவிதை வளம் கூடும். தமிழ் மறவாமல் நிலைக்கும்'' என்று கூறினார்.

ஆத்தங்குடிக்கு வந்திருந்தபோது, தொடங்கிய திராவிடக் கழகக் கிளைக்கு நூலகம் வைக்கச் சொல்லி, பாவேந்தர் ஒரு கடிதம் கொடுத்தார். அவர் கடிதத்தைக் குடியரசு அலுவலகத்துக்கு அனுப்பியபோது அறுபது புத்தகங்களை அவர்கள் இருபது ரூபாய்க்கு அனுப்பி வைத்தார்கள். அவை அத்தனையும் தன்மான இயக்க நூல்கள்,

இப்போது பாவேந்தர் எழுதித்தந்த பட்டியலில் இருந்த நூல்கள் அத்தனையும் சமய இலக்கியங்கள்.

குற்றாலக் குறவஞ்சி, மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ். இப்படிப்பட்ட பல பிரபந்த நூல்கள்.

''அய்யா, இவை யெல்லாம் சமய நூல்களாயிற்றே!'' என்று கேட்டேன்,

''சமய நூல்கள் என்று ஒதுக்கிவிடாதே. நமக்கு தமிழ் இலக்கியம் என்று இப்போது இருப்பதெல்லாம் சமய நூல்களே! இவற்றைத் தான் நாம் படிக்க வேண்டியிருக்கிறது. பயில்வதற்கு நாம் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற பிறகு, நாம் நல்ல தன்மான இலக்கியங்களை சமயச் சார்பற்ற இலக்கியங் களைப் படைக்க வேண்டும், அதற்காகத்தான் நானும் நீயும் இருக்கிறோம்'' என்று தெளிவு படுத்தினார் புரட்சிக் கவிஞர்.

அவர் விளக்கத்தைக் கேட்டபின் நான் தெளிவு பெற் றேன், நேரே பவழக்காரத் தெருவில் இருந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குச் சென்று அத்தனை நூல்களையும் வாங்கிக் கொண்டேன், அந்த நூல்கள் அத்தனையும் காலத் தால் அழியாத சிறந்த சிற்றிலக்கியங்கள். அவற்றைப் படித்ததன் பயனாகவே என்னுடைய தமிழ்நடை இனிமை யாக அமைந்தது, என் கவிதைகளில் இனிமை திகழ்வதற்குக் காரணம் அந்தத் தமிழ் நூல் பயிற்சியே!

புரட்சிக் கவிஞர் என்னை நெறிப்படுத்தியவாறே நான் இன்று அறிவு இலக்கியங்களைப் படைத்து வருகிறேன்.

# கவியரங்குகளில் பாரதிதாசன்

பொன்னி இதழில் துணையாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது, கோவையில் அறிஞர் அண்ணா தலைமையில் நடந்த முத்தமிழ் மாநாட்டிற்குச் சென்றிருந் தேன்,

மாநாட்டில். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் கவியரங்கம் ஒன்று நடக்கும் என்றும், அதில் இளங்கவிஞர்கள் பங்கேற்கலாம் என்றும் சிறந்த கவிதைக்கு ரூ 25/பரிசு வழங்கப் படும் என்றும், அந்தப் பரிசும், புரட்சிக் கவிஞர் தேர்ந் தெடுக்கும் கவிஞருக்குப் புரட்சிக் கவிஞர் கையாலேயே கொடுக்கப்படும் என்றும் அண்ணா அறிவித்தார்.

அந்தக் கவியரங்கத்தில் அன்றைய இளங்கவிஞர்கள் கலந்து கொண்டனர்.

கவிஞர் முடியரசன்

கவிஞர் வாணிதாசன்

கவிஞர் சிவப்பிரகாசம்

மற்றும் பல கவிஞர்கள் கலந்து கொண்டனர். நானும் கலந்து கொண்டேன்.

அண்ணா அறிவித்ததைத் தொடர்ந்து நாங்கள் கவிதை எழுதுவதில் முனைந்தோம், அனைவரும் மாநாட்டுப்

பந்தலிலேயே கவிதைகளை உருவாக்கினோம், புரட்சிக்கவிஞர் தலைமையில் அரங்கேற்றினோம்.

நான் அழகு மங்கை என்ற தலைப்பில் கவிதை எழுதிப் படித்தேன். கவிஞர்கள் அனைவரும் படித்து முடித்தபின், புரட்சிக் கவிஞர் பிற்பகல் மாநாட்டில் பரிசுக்குரிய கவிதை எதுவென்று அறிவிப்பதாகக் கூறிவிட்டார்,

உணவு வேளையின் போது மாநாட்டுக்கு வந்திருந்த இயக்க முன்னணித் தலைவர்கள் பலர் என்னைக் கண்டு, பாராட்டினார்கள்,

அறிஞர் அண்ணாவும் என்னைக் கண்டு பாராட்டி, புரட்சிக் கவிஞர் எனக்குத்தான் பரிசு வழங்குவார் என்று நம்புவதாகக் கூறினார்; நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பிற்பகல் மாநாடு தொடங்கியது. புரட்சிக் கவிஞர் வந்து மேடையில் அமர்ந்தார்.

பரிசுக் குரிய கவிதையை அறிவித்து, எழுதிய கவிஞருக்குப் பரிசு வழங்கும்படி அண்ணா கேட்டுக் கொண்டார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுந்து, ஒலிபெருக்கி அருகில் வந்து

சிறந்த கவிஞராக வாணிதாசன் அவர்களை அறிவித்து, மேடைக்கு அழைத்துப் பரிசு வழங்கினார்.

எனக்கு ஒரே ஏமாற்றமாகப் போய்விட்டது, அறிஞர் அண்ணா உட்பட பல தலைவர்கள் பாராட்டியும் புரட்சிக் கவிஞர் பாராட்டுப் பெற முடியாமல் போயிற்றே என்று வாடிப்போனேன்.

மாநாடு முடிந்து மேடையைவிட்டு இறங்கி வந்த புரட்சிக் கவிஞர் என் வாட்டத்தைக் கவனித்துவிட்டார். என் அருகில் வந்தார்.

"முதலில் உன் கவிதைக்குத்தான் பரிசு கொடுக்க நினைத்தேன். ஆனால், ஆழ்ந்து நோக்கியபோது உன் கவிதை என் கவிதை போலவே இருந்தது. பிறர் என்ன நினைப்பார்கள். நானே எழுதிக் கொடுத்து, உன்னைப் படிக்கச் சொல்லி, உனக்குப் பரிசு கொடுத்ததாக எண்ணலாம் அல்லவா? அதனால்தான் உனக்குப் பரிசு கொடுப்பதைத் தவிர்த்தேன். உன்னுடைய நடையை மாற்றிக்கொள்" என்று கூறினார்.

பாரதிதாசனைப்போலவே எழுதாமல் இருக்கப் பிறகு பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, எனக்கென்று ஒரு தனி நடையை ஏற்படுத்திக் கொண்டேன்.

கோவையில் நடந்த முத்தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் புரட்சிக் கவிஞர், பாரதிதாசன் தலைமையில் நான் அரங்கேற்றிய பாட்டு.

# அழகு மங்கை

வாள்சுற்றிப் போர்செய்யும் பகைக்கஞ் சாத
வன்னெஞ்சப் போரேற்றின் திணவெ டுத்த
தோள்சுற்றும் வேகத்தில் துடிது டித்துத்
தோன்றியதோர் அழகுதனைக் கண்டேன்! அந்த
வாள்மின்னும் மின்னலிலும் கார்மே கம்போல்
வரும்யானைக் கூட்டத்தும், பவழம் போலத்
தூள்தூளாய்க் கதிரொளியில் மின்னும் ரத்தத்
தோய்வினிலும் சிரித்தவள்தான் தோன்றக் கண்டேன்!

வையத்தில் இருக்கின்ற பொருளி லெல்லாம்
வானத்தில் ஒளிர்கின்ற மீனில் எல்லாம்
தையலர்கள் மீனக்கண் ஒளியி லெல்லாம்
தானாகத் தோன்றியவள் கவிதை தந்து,

செய்யதிருப் பாக்களிலே நடம்பு ரிந்து
சிறுகுழந்தை புன்னகையில் மின்ன லாகிப்
பெய்திருக்கும் மழைநீரில் ஓடி வந்து
பெருமகிழ்வால் சிரித்தபடி பேசு கின்றாள்

செந்நெல்லின் பச்சையிலே சேர்ந்து கொண்டாள்
சேற்றுக்குள் தாமரையாய் வளர்ந்து நின்றாள்
புன்னகையின் ஒளிதன்னைப் போர்த்துக் கொண்டாள்
பூரித்து நிற்கின்றாள் மாம்ப ழத்தில்!
அன்னத்தில் வெண்மைநிற மாகத் தோன்றி
அதுவைத்த தளிர்வாழை தன்னிற் சேர்ந்து
சின்னக்கொவ் வைக்கனியில் சிவந்து தோன்றிச்
செம்பவழத் தன்னிலவள் சிரிக்க லானாள்!

காலையிலே கடல்மீது தோன்று கின்ற
கதிரவனின் செவ்வொளியில் மிதந்து வந்தாள்
சாலையிலே நடுப்பகலில் மரத்தின் கீழே
சரிந்திருக்கும் நீழலிலே ஒட்டிக் கொண்டாள்!
மாலையிலே வானத்தின் செங் களத்தில்
வழிந்திருந்த குருதியிலே மின்னித் தோன்றிச்
சோலையிலே நிலவுதந்து பாலை அள்ளித்
தெளித்தவுடன் சிரித்துவிட்டாள் அழகு மங்கை!

வானத்து மீன்களிலே கண் சிமிட்டி
வருகவென அழைக்கின்றாள். அணுகும் போது
கானத்துத் தளிர்மேனி தழுவத் தந்து
காதலினை வளர்க்கின்றாள்! முல்லைப் பூவில்
நீமுத்தம் தாவென்று நெட்டு யிர்த்து
நெடுநாளாய் எதிர்பார்த்த செல்வத் தோடு
சீனத்துக் கப்பல்வரும் கடல்நு ரையில்
சிரிக்கின்றாள்; எக்களித்துக் குதிக்கின் றாளே!

தூரத்துப் பச்சையிலே காட்சி தந்தாள்!
  துள்ளிவரும் மான்முதுகில் புள்ளி யானாள்!
பூரித்துத் தோன்றுகிறாள் காலிக் கூட்டம்
  புற்றரையில் மேய்கின்ற போது நெஞ்சம்
ஆரத் தழுவுகின்றாள் தென்ற லாகி
  அலையடித்து நுரையெழுப்பிப் பாயும் ஆற்றின்
ஓரத்துக் கரைகளிலே மலர்ந்தி ருக்கும்
  ஒளிவண்ணப் பூக்களிலே சிரிக்கின் றாளே!

—நாரா நாச்சியப்பன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு நூலின் முதற் பாட்டு.

# அழகு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
  கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
  தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
  மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள். ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டம்
  தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்!

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
  திருவிளக்கிற் சிரிக்கின்றாள். நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
  நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே! செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
  புதுநடையில் பூரித்தாள்! விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தி னாள்;என்
  நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்!

திசைகண்டேன், வான்கண்டேன், உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன். யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன். மற்றும்
அழகுதனைக் கண்டேன்நல் லின்பங் கண்டேன்
பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்!
பழமையினால் சாகாத இளையவள் காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை!

—பாரதிதாசன்

குறிப்பு: இந்த இரு பாடல்களிலும் பாடு பொருள் ஒன்றே! பாடும் முறையும் ஒன்றே! பாட்டுநடையும் ஒன்றே! ஆனால் கற்பனையும் கவிச்சிறப்பும் தமிழ் ஆளுமையும் தனித்தனிச் சிறப்பு வாய்ந்தவை என்பதை இரண்டையும் ஒப்புநோக்கு வார் நன்கு அறியலாம்.

*   *   *

மீண்டும் ஒரு முறை கோவையிலே புரட்சிக் கவிஞர் தலைமையில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது.

கல்கி அவர்கள் பெரு முயற்சி எடுத்து பாரதியாருக்கு மணிமண்டபம் ஒன்று எட்டயபுரத்தில் கட்டினார். அதன் திறப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்தார். பாரதியார் மணிமண்டபத் திறப்பு விழாவுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை அழைக்கவில்லை.

பாரதியாரோடு நெருங்கிப் பழகிய பலரை அழைக்க வில்லை பாரதியார் குடும்பத்தினரையே அழைக்கவில்லை.

எனவே, அவர் அழைக்காத பாரதி அன்பர்களை யெல்லாம் அழைத்து அதே நாளில் கோவையில் பாரதிவிழா ஒன்று நடத்தினார் தொழில் மேதை ஜி. டி., நாயுடு.

புரட்சிக் கவிஞர் தலைமையில், பல இயக்கங்களைச் சேர்ந்த கவிஞர்கள் பத்துப்பேர், பாரதியார்பற்றிக் கவிதை படித்தார்கள்.

தன்மான – திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களாக நானும் கவிஞர் சுரதா அவர்களும் பாரதியார்பற்றிக் கவிதை படித்தோம்.

அடுத்த நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்ற இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் முன்னதாகவே கவியரங்கம் தொடங்கும் போதே வந்து, மேடையில் என் அருகிலேயே அமர்ந்து கொண்டார். (பிற்காலத்தில் கூட்டங்களுக்கு நேரங் கழித்து வருவதை ஒரு முறையாக வைத்துக் கொண்ட அறிஞர் அண்ணா அந்த நாட்களில் முன் கூட்டியே வந்துவிடுவார்.)

கவியரங்கம் முடிந்த பிறகு என்னையும் சுரதாவையும் சந்தித்த புரட்சிக் கவிஞர், எவனெவனோ பாரதியாரைப் பற்றி என்னென்னவோ பாடினான். நம் கருத்தைப்பாட நம் ஆட்கள் இல்லையோ என்று கவலைப்பட்டேன். நீங்கள் இரண்டுபேரும் வந்து என் உள்ளத்தில் பாலை வார்த்தீர்கள் என்று பரவசப்பட்டார்.

கோவை பாரதிவிழாவில் பாரதியார்பற்றி நான் பாடிய பாடல் இது.

# பாரதியார்

வெட்டரிவாள் போல்முறுக்கி விட்ட மீசை
விழிகளிலே ஒளிபெருக்கும் வீரப் பார்வை
கட்டற்ற உரிமைதனை விரும்பும் நெஞ்சம்
கற்பனையில் நனைந்ததமிழ் பாடும் செவ்வாய்

சட்டைக்கு மேல்பழைய கோட்டு மற்றும்
சரிகையின்றித் தலைமேலே சேரன்போலே
கட்டிவைத்த தலைப்பாகை இதுதான் அந்தக்
கவியரசன் பாரதியின் தோற்றம் கண்டீர்!

நீருக்குள் விளக்கெரியும் விந்தை யான
நிகழ்ச்சிதனைக் கதைக்கின்ற புலவன் அல்லன்
பாருக்குள் தான்பிறந்த நாட்டில் உள்ளார்
படுந்துயரம் தனைக்கண்டான்; வளமி ருந்தும்
சீருக்கும் சிறப்புக்கும் இடமில் லாத
திருநாட்டின் அடிமைநிலை கண்டான், யாண்டும்
வீரக்கும் மாளமிட்டுத் தன்தாய் நாட்டார்
விளங்கும்நாள் தனைக்கொணர முயன்ற வீரன்!

கலிங்கத்தை வென்றாராம்; கண்ண கிக்குக்
கல்சுமக்க வைத்தாராம், இமய மீது
புலிபொறித்து வந்தாராம் புகழ்கொண் டாராம்
புலவரெல்லாம் கதைக்கின்றார். அணுவு மின்று
வலிவில்லை தாய்நாட்டின் மக்க ளென்போர்
வாலறுத்த குரங்குகளாய் மாற்றான் ஆட்சி
வலைப்பட்டுச் சிதையும்நிலை கண்டான். இந்த
வாழ்வுநிலை மாறாதோ என நினைத்தான்.

கரும்புவிளை தோட்டத்தில் அரும்பு போன்ற
கைவிரல்கள் நோவெடுக்க வேலை செய்யும்
திருநாட்டின் மாதர்நிலை கண்டு கண்ணீர்
சிந்திநின்றான்; தொண்டுசெய்யும் சிப்பாய்க் கஞ்சிப்
பெருமக்கள் ஓட்டமெடுத் தொளிந்து வாழும்
பேடிநிலை, பேய்பூதம் பிசாசு போன்ற
வெறும்எண்ணத் தோற்றத்திற் கெல்லாம் அஞ்சி
வீழடிமை நிலைபோக்கத் திட்ட மிட்டான்

வாக்கினிலே உறுதியில்லை; செயகை தன்னில்
　　வலிவில்லை; மாற்றானை எதிர்த்தொழிக்க
ஊக்கமில்லை; ஒற்றுமையோ சற்று மில்லை.
　　உயிரடிமை ஆய்விட்டார் எனினும் இங்கே
மேற்குதனைத் தொழுபவரும் கிழக்கு நோக்கி
　　மெய்வணக்கம் செய்பவரும் உரிமை போன
தாக்குமெனத் தமக்குள்ளே தாக்கி மாய்வார்
　　தம்மடிமை நிலைபோக்க நினைக்க மாட்டார்.

கவிதையினாற் செந்தமிழிற் புரட்சி சேர்த்த
　　கவியரசன் பாரதியின் கருத்தில் இந்தச்
சுவையற்ற வாழ்க்கைநிலை போக்கும் எண்ணம்
　　தோன்றியதே! நொடிதோறும் தோன்றி யிந்தக்
கவைக்குதவா வாழ்வுதனை மாற்ற உன்றன்
　　கவிதையினைப் பயன்படுத்து; கவின்சேர் வாழ்வைப்
புவியிலுன்றன் தாய்நாடும் பெற்று வாழ்ந்து
　　புதுநலத்தைச் சுவைக்குமெனக் கூறிற் றாமே!

முன்னாளில் ஒருபுலவர் கடவுள் பேரில்
　　முழநீளம் பாட்டெழுதிக் காம எண்ணம்
தன்னையங்குப் பொழிந்திருப்பார். மீண்டும் அந்தத்
　　தனிக்கடவுள் தனைநோக்கி ஒருவர் சொல்வார்
என்னேஇவ் வாழ்க்கைபெரும் மாய மென்றே
　　இன்னொருவர் கடவுள்களின் லீலை யெல்லாம்
தன்னேரில் லாதசெந் தமிழில் பாடித்
　　தாம்பெரிய புலவரெனத் தருக்கிக் கொள்வார்.

ஒருநாட்டின் நாகரிக வளர்ச்சி தன்னை
　　உணர்த்துகின்ற கண்ணாடி இலக்கியந் தான்!
பெரும்புலவர் பலருமிதை மறந்தார், ஈசன்
　　பெருமைகளைப் பாடுவதே தொழிலாய்க் கொண்டார்

அரும்புலவன் பாரதிதான் பிறந்த நாட்டின்
அவலநிலை சித்திரித்தான் இடித்துக் காட்டித்
"திருநாடே விழித்திடுக" எனும் புரட்சித்
தேன்மொழியைச் செவிகுளிரப் பாய்ச்சி விட்டான்!

உழக்குக்குள் கிழக்கென்ற வாறே இங்கே
ஊரெல்லாம் வெள்ளையருக் கடிமை யான
இழுக்கிருக்கும் போதுயர்த்த சாதி என்னும்
இறுமாப்பும் நிலைத்ததுவே சிலரி டத்தில்
முழக்கினார் "இழிசாதி மக்கள் யாரும்
முன்வரக் கூடாதென்றே!" எதிர் முழக்கம்
முழக்கினான் பாரதிதான் "இந்த நாட்டின்
முடிமன்னர் யாவரும்காண்" என்று ரைத்தே!

பாரதிதன் தாய்நாட்டின் மீது வைத்த
பற்றிற்கோர் எடுத்துக்காட் டுரைப்பேன் கேளீர்!
சீரிய என் தமிழ்நாட்டுப் பெண்ணைத் தோற்கச்
செய்யும்அழ குடையாள்இன் னொருத்தி யென்று
கூறிடினும் உளம்பொறுப்ப தில்லை யென்று
கூறினான் உயர்கவிஞன் அவனே யன்றோ?
கூறியதும் வீறுதனை உளப்ப படுத்தும்
கொள்கையினால் அன்றோசெந் தமிழ்நாட்டாரே!

உரிமையினை முழுமையுற அடைய வேண்டின்
உணர்வடைய வேண்டுமிந்த நாட்டு மக்கள்.
சரியான உணர்வுபெற வேண்டு மென்றால்
சற்றேனும் மடமையச்சம் கூடா தன்றோ?
புரிந்துகொண்டான் பாரதிதான் அச்சந் தானே
போக்கற்ற அடிமைநிலை சேர்க்கும் என்றே!
வரிந்துகட்டிக் கொண்டடிமை நிலைமே போக்க
வாழ்நாளைச் செலவிட்டான் புரட்சி வேந்தன்.

வாழ்நாளின் பாரதியை இழந்து விட்டோம்
வந்துவிட்டான் நம்உளமாம் மண்டபத்தில்
வாழ்கின்றான்! வீரத்தை வெற்றி தன்னை
வாழ்வுரிமை அத்தனையும் அடைந்த நெஞ்சில்
வாழ்கின்றான் அவன்உயர்வை எண்ணி யெண்ணி
மகிழ்கின்ற பெருமக்கள் உள்ளந் தன்னில்!
வாழ்கின்றான்! பாரதிதான் சாக வில்லை!
வாழ்கின்றான்! வாழ்கின்றான்! வாழ்க நன்றே!

* * *

சீனர்கள் இந்திய எல்லையில் தங்கள் படைகளைக் குவித்தனர். அதை எதிர்த்துக் குரல் கொடுத்த நம் அரசு அவர்களை விரட்டப் படைகளை அனுப்பியது.

சீனர்களின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து சென்னையில் கூட்டம் நடந்தது. சீன எதிர்ப்புக் கூட்டத்தில் பாவேந்தர் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

கவிஞர் நாகமுத்தையா
கவிஞர் தமிழழகன்
கவிஞர் சுரதா

மற்றும் பல கவிஞர்கள் கலந்து கொண்டனர். பாவேந்தர் விருப்பத்தின் பேரில் நானும் ஒரு பாடல் எழுதிப் படித்தேன்.

சீனர் செயலைக் கண்டித்துப் பாடிய எங்களை யெல்லாம் பாவேந்தர் பாராட்டிப் பேசினார்.

பாவேந்தரோடு நான் மிக நெருங்கிப் பழகவும் இல்லை. நெருங்காமலே இருந்ததுமில்லை. பல நேரங்களில் அவர் என்மீது ஒரு பற்றும் மதிப்பும் வைத்திருந்தார் என்று எண்ணும் போது அவருடைய பரந்த உள்ளம் என்னை வாழ்த்தியது என்று எண்ணும் போது ஒரு மகிழ்ச்சி பூக்கிறது.

# பாரதிதாசன் பரம்பரை

முருகு சுப்பிரமணியன் அவர்கள் பொன்னி இதழ் தொடங்கும்போதே, பொன்னி இதழை எவ்வாறு நடத்த வேண்டும் என்று ஒரு வடிவமைப்பை வைத்துக் கொண்டார்.

பொன்னி ஒரு பொதுநிலை இதழாக இருக்க வேண்டும் என்பதோடு, தமிழ் மக்கள், தமிழ் நாடு, தமிழ் மொழி சார்ந்த பெருமக்களையும், மன்றங்களையும், அமைப்புகளையும் நாடு முழுவதும் பரவி வளர்ப்பதற்கு ஏற்ற ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்று கொள்கை வகுத்துக் கொண்டார்.

மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தி, விடுதலையுணர்வைத் தட்டி எழுப்புகின்ற நல்ல தலைவர்களான பெரியார், அண்ணா, புரட்சிக் கவிஞர் என்ற முப்பெருந் தலைவர்களை — அவர்களின் தொண்டை — அவர்களின் பெருமையை மக்களிடையே தொடர்ந்து பரப்புகின்ற பணியைப் பொன்னி செய்து வந்தது.

மற்ற பிரபல இதழ்களெல்லாம் தீபாவளி இதழ் வெளியிட்ட காலத்தில், தீபாவளி தமிழர் விழாவல்ல; பொங்கல்தான் தமிழர் திருநாள் என்ற கருத்தைப் பரப்புவதற்காக பொன்னி பொங்கல் மலர்களை வெளியிட்டது. நல்ல வழவழப்பான விலை உயர்ந்த தாளில், பெரிய அளவில் பொன்னி வெளியிட்ட பொங்கல் மலர்கள் நாட்டில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

சிலப்பதிகாரக் காட்சிகளும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படைத்த காவியக் காட்சிகளும் பொன்னி அட்டைப்படங்களாகவும், மலர் அட்டைப்படங்களாகவும், வண்ணப்படங்களாகவும் நல்ல ஓவியர்களால் எழுதப்பெற்று வெளி வந்தன.

பெரியார் அண்ணா புரட்சிக் கவிஞர் ஆகியோர் உருவப் படங்கள் நல்ல கனமான ஆர்ட் அட்டைகளில் பல வண்ணப் படங்களாகப் பொங்கல் மலர்களில் வெளிவந்தன.

தமிழ்ப்பற்றுள்ள பல குடும்பங்களில் பொன்னி வெளியிட்ட தலைவர்களின் வண்ணப் படங்கள் கண்ணாடிச் சட்டமிட்டு மாட்டி வைக்கப்பட்டன.

பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகள் மட்டுமல்லாது புதுத் தமிழ் உணர்வூட்டும் புரட்சிக் கட்டுரைகளும் இடம் பெற்றன.

புரட்சிக் கவிஞரைப் பெருமைப் படுத்தும் வகையில் அவரைப் பின்பற்றி எழுதும் பல சிறந்த கவிஞர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்த ஒரு புதுப் பகுதியை பொன்னியின் முதல் இதழிலேயே தொடங்கி வைத்தார் முருகு சுப்பிரமணியன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பின்பற்றி அவருடைய பாணியை மட்டுமல்லாமல், அவர் பரப்பிய தன்மானக் கருத்துக்களையும் கொண்ட இளங்கவிஞர்கள் மிகப் பலர் இருந்தார்கள். முடியரசன், வாணிதாசன், சுரதா, சிவப்பிரகாசம், கோவை இளஞ்சேரன், மு. அண்ணாமலை, நாக முத்தையா, சாமி பழனியப்பன் போன்ற பல கவிஞர்கள், புதுத் தமிழ் உணர்வுப் பாடல்களைப் படைத்து வந்தனர். இவர்களையெல்லாம் "பாரதிதாசன் பரம்பரை" என்ற தலைப்பில், பொன்னியில் அறிமுகப் படுத்தினார். இவர்கள் எழுதிய சிறந்த கவிதைகளை இதழுக் கொன்றாக வரிசையாக அறிமுகப்படுத்தியது பொன்னி,

பாரதிதாசன் பரம்பரையின் முதல் கவிஞராக அறிமுக மானவர் மு. அண்ணாமலை. இரண்டாவதாக நான். அடுத்து முடியரசன், சுரதா, வாணிதாசன், ச சிவப்பிரகாசம், கோவை இளஞ்சேரன் குலோத்துங்கன், நாகமுத்தையா போன்ற கவிஞர்கள் அறிமுகமாயினர். 48 இளங்கவிஞர்கள் பாரதிதாச பரம்பரையாகப் பொன்னி மூலம் அறிமுகப் படுத்தப் பெற்றனர்.

முதல் இரண்டு ஆண்டுகளில் இதழ்தோறும் பாரதிதாசன் படைத்த புதிய பாடல் ஒன்று தொடர்ந்து இடம் பெற்று வந்தது. இந்த இரண்டு ஆண்டுகளிலும், இதழ் தோறும் என்னுடைய பாடல் ஒன்றும் தொடர்ந்து இடம் பெற்று வந்தது.

பொன்னி வெளியீடாக வந்த என்னுடைய ஈரோட்டுத் தாத்தா என்ற நூலுக்கும் நான் எழுதிய 'கொய்யாக் காதல்' என்ற சிறு காவிய நூலுக்கும் புரட்சிக் கவிஞர் தம்முடைய 'குயில்' இதழில் பாட்டாகவே மதிப்புரை எழுதிப் பெருமைப் படுத்தினார்.

பொன்னி நிறுவனத்தின் 'முத்து' என்ற சிறுவர் இதழை நான் ஆசிரியராக இருந்து வெளியிட்டேன். அதில் புரட்சிக் கவிஞர் தாமாகவே ஒரு தொடர் எழுத முன்வந்தார்.

திருக்குறள் கருத்துக்களை இதழுக்கொரு குறள் என்ற முறையில் சினிமாக் காட்சி போல நாடகமாக எழுதித்தர முன்வந்தார்.

'திருக்குறள் சினிமா' என்ற தலைப்பில் மூன்று இதழ் களில் தொடர்ந்து எழுதினார். பிறகு முத்து வெளிவருவது தடைப்படவே, புரட்சிக் கவிஞரின் திருக்குறள் சினிமாவும் தொடரவில்லை.

திருக்குறளைப் பரப்புவதற்குப் புரட்சிக் கவிஞர் கண்ட புதுமுறை திருக்குறள் சினிமா.

# தேடிவந்த குயில்

1947ஆம் ஆண்டு.

பொன்னியில் நான் துணை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

பெரியண்ணன் அவர்களும், முருகு சுப்பிரமணியம் அவர்களும் இணைந்து பொன்னி இதழை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நடத்திய 'முத்து' என்ற சிறுவர் பத்திரிக்கைக்கும் நான் ஆசிரியராக இருந்தேன்.

ஒருநாள் புதுக்கோட்டைக்கு வந்த பாவேந்தர் பொன்னி அலுவலகத்துக்கு வந்திருந்தார். அன்று பொன்னி ஆசிரியர் வீட்டில் பாவேந்தருக்கு விருந்து.

விருந்து முடிந்து ஓய்வாக இருந்த போது, பாவேந்தர் அவர்கள் முருகு சுப்பிரமணியனைப் பார்த்து, என்னைக் காட்டி,

"'இவனைப் போல் எனக்கு உதவியாக ஒரு பையன் இருந்தால் நல்லது. யாராவது இருந்தால் அனுப்புங்கள். என் வீட்டிலேயே சோறு போட்டு வைத்துக் கொள் கிறேன்." என்று கூறினார்.

யாரை அனுப்பலாம் என்று முருகும் பெரியண்ணனும் எண்ணிக் கொண்டிருந்த போது, 'அண்ணாமலை சும்மா தானே இருக்கிறான். அவனை அனுப்பலாமே!'' என்று கூறினேன்.

''பொருத்தமான ஆள் தான்! நாளை அண்ணாமலை யைக் கேட்போம்'' என்று சொன்னார் பெரியண்ணன்.

மறுநாள் அண்ணாமலை பொன்னி அலுவலகத்துக்கு வந்தபோது முருகு கேட்டவுடன், அண்ணாமலைக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

கவிஞர் மு. அண்ணாமலை அப்போது இருபது வயது இளைஞர். என் வகுப்புத் தோழராயிருந்தவர். இளமை யிலேயே வறுமைக்கு ஆட்பட்டவர். இண்டர்மீடியட்வகுப்பு வரை படித்து விட்டு மேலும் படிக்க வசதியில்லாமல் வேலை தேடிக் கொண்டிருந்தார்.

இரண்டு வாரங் கழித்து புரட்சிக் கவிஞருக்கு அறிமுகக் கடிதம் கொடுத்து அண்ணாமலையைப் புதுவைக்கு அனுப்பி வைத்தார் முருகு.

சில நாட்கள் கழித்து, ஒரு மாநாட்டில் சந்தித்தபோது, ''அண்ணாமலை மிக உதவியாக இருக்கிறான், கவிதை நன் றாக எழுதுகிறான்'' என்று புரட்சிக் கவிஞர் முருகுவிடம் கூறினார். ஆனால், இரண்டே மாதத்தில் அண்ணாமலை திரும்பி வந்து விட்டார்.

புரட்சிக் கவிஞர் வீட்டில் இல்லாதபோது சொல்லிக் கொள்ளாமல் ஓடிவந்து விட்டார். முருகு சுப்பிரமணியன் அண்ணாமலையைக் கடிந்து பேசினார். 'கவிஞர் வந்த பிறகு சொல்லிக் கொண்டல்லவா வந்திருக்க வேண்டும்?'' என்று சினந்தார்.

அதற்கு அண்ணாமலை, "நான் நேரில் சொன்னால் அவர் என்னை விடமாட்டார். அவர் என்மேல் கொள்ளை அன்பு வைத்திருந்தார்" என்று பதிலளித்தார்.

"அவ்வளவு அன்பு வைத்திருந்தவரை விட்டு நீ ஏன் ஓடி வந்தாய்?" என்று கேட்டார் முருகு.

"புரட்சிக் கவிஞர் வீட்டில் இருக்கும் போது, எப்போதும் விருந்துதான்! ஆனால். சிலசமயம் என்னைப் புதுவையில் விட்டுவிட்டு, அவர் மட்டும் வெளியூர் செல்லும் போதுதான் திண்டாட்டம்!

"அவர் வீட்டில் இல்லாதபோது குடும்பத்தில் எல்லாருக்கும் அரைகுறைச் சாப்பாடுதான்! சில நாட்கள் எல்லாரும் பட்டினிதான்! என்னால் பட்டினி பொறுக்க முடியவில்லை. ஓடிவிந்து விட்டேன்" என்றார் அண்ணாமலை.

இதே மு. அண்ணாமலை பின்னால் கோனாபட்டு முத்தையா செட்டியாரின் தத்துப் பிள்ளையாகி, வசதி வந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்று, அங்கேயே ஆசிரியர் பணியில் சேர்ந்து விரிவுரையாளராகி சிதம்பரம் கனகசபை நகரில் வீடு வாங்கி வளர்ச்சியடைந்திருந்த காலம்.

1961ஆம் ஆண்டில், கவிஞர் மு. அண்ணாமலை சென்னையில் "முத்தையா அச்சகம்" என்ற பெயரில் அச்சகம் தொடங்கினார். செட்டிநாட்டு ராணி மெய்யம்மை ஆச்சி குத்துவிளக்கேற்றி வைக்க. ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் புதுக்கணக்கு எழுதித் தொடங்கி வைத்த அச்சகம் அது.

அப்போது நான் தென்றலில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். ஒரு நாள் அண்ணாமலை என்னிடம் வந்தார்,

"நான் சென்னையில் அச்சகம் தொடங்கி விட்டேன். பார்த்துக் கொள்ள ஓர் ஆள் வேண்டும். நீ வந்து பார்த்துக் கொள்வாய் என்ற எதிர்பார்ப்பில்தான் துணிந்து அச்சகம் வைத்தேன்" என்றார்.

நண்பருக்கு உதவுவோமே என்ற எண்ணத்தில் தென்றலை விட்டுவிட்டு முத்தையா அச்சகத்துக்கு வந்து பொறுப்பேற்றேன்.

ஒரு நாள் முத்தையா அச்சகத்தில் முன்னால் உள்ள அலுவலக அறையில் உட்கார்ந்து மெய்ப்புத் திருத்திக் கொண்டிருந்தேன்.

எதிரில் யார் வந்திருக்கிறார் என்று அறியாமல், ஓசை கேட்டும் நிமிர்ந்து பார்க்காமல் குனிந்து வரிகளைப் பார்த்த படியே திருத்திக் கொண்டிருந்தேன்.

"ஐயா, ஐயா" என்ற குரல் என் கவனத்தைத் திசை திருப்பியது. நிமிர்ந்து பார்க்கிறேன்.

நல்ல சிவப்பு—ஒல்லியான உடல், ஓர் இளைஞர்.

"புரட்சிக் கவிஞர் வந்திருக்கிறார்கள்."

மின்விசையைத் தட்டியது போல் எழுந்து நிற்கிறேன்.

எதிரில் வெளிக் கதவுக்கு அப்பால் இமயம் நின்றதுபோல் பாவேந்தர் எழுந்தருளியிருக்கிறார்.

பாவேந்தரைக் காணுகின்றேன். என் கைகள் கூப்பு கின்றன. மெய் சிலிர்க்கிறது. என் அறையை விட்டு வெளியில் வருகிறேன்.

"ஐயா, உட்காருங்கள்." வேண்டுகின்றேன்.

பாவேந்தர் உள்ளே வருகிறார். இருக்கையில் அமர் கிறார்.

''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்ற கேள்விக் குறியோடு நிற்கிறேன்.

பாவேந்தர் என்னைத் தேடி வந்திருக்கிறார் என்ற எண்ணம் நெஞ்சில் பெருமையுணர்வை உண்டாக்குகிறது. பேச்சு எழவில்லை. பணிவோடு அவர் பேசுவதை எதிர் பார்த்து நிற்கிறேன்,

பாவேந்தர் பேசத் தொடங்குகிறார்.

''குயில் வெளிவர வேண்டும், சரியான அச்சகம் வேண்டும். நீ இங்கே இருக்கிறாய் என்று கேள்விப்பட்டு வந்தேன். உன்னிடம் அச்சுப் பணியை ஒப்படைக்கிறேன். என்னால் அடிக்கடி நேரில் வர முடியாது. இந்தப் பையன் என்னிடம் பணிபுரிகிறார். இவர் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்வார். மிகப் பொறுப்பான பையன். இவர் மூலம் நீ என்னோடு தொடர்பு கொள்ளலாம். மெய்ப்புகளை இவர் மூலம் அனுப்பி வைக்கலாம்,''

''நானே கொண்டு வருகிறேன் ஐயா,''

''வேண்டாம், வேலை தொடர்பாக நீ அலைய வேண்டியதில்லை, பொன்னடி பார்த்துக் கொள்வார். ஓய்வு கிடைக்கும் போது நீ வந்து பார்.''

இவ்வாறு கட்டளையிட்ட பாவேந்தர் ஓர் இதழுக் கென்று கொண்டு வந்திருந்த மூலப்படிகளை ஒப்படைத்து, ஒரு வார கால அளவில் அச்சுவேலை முடிய வேண்டும் என்றும் பணித்துவிட்டு, பொன்னடியுடன் எழுந்து சென்றார்.

குறித்தபடி வேலை முடித்து குயில் இதழ்களை அனுப்பி வைத்தேன். மறுநாளே பொன்னடி வந்தார்.

''ஐயா. இதழ்கள் வந்தன. பட்டியல் வரவில்லை, பட்டியல் வாங்கிக் கொண்டு பணம் கொடுத்து வரும்படி பாவேந்தர் அனுப்பி வைத்தார்.'' என்றார்,

"பட்டியல் எவ்வளவு போடுவதேன்று........" என்று நான் இழுத்தேன்,

"தங்கள் தயக்கத்தைப் பாவேந்தர் உணர்ந்திருக்கிறார். இதில் தாங்கள் சலுகை காட்ட மேண்டியதில்லை. முறைப் படி எவ்வளவு போடுவீர்களோ, அதைப் போடுங்கள். தாங்கள் காட்ட வேண்டிய சலுகை யெல்லாம், குயிலை உரிய நேரத்தில், பிழையில்லாமல் அச்சிட்டுத் தர வேண்டியது தான். பாவேந்தர் என்னிடம் இன்னொன்றும் கூறினார்கள்.

"நாச்சியப்பன் வேறொருவரிடம் வேலை பார்க்கிறான். அவனுக்கு நாம் தொல்லையாக இருக்கக் கூடாது. நம் நிலைமை எப்படியிருந்தாலும் அச்சகப் பட்டியலை உடனுக் குடன் தீர்த்துவிட வேண்டும் என்று நிலையான ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்."

அன்று பொன்னடி கூறிய இந்தச் சொற்கள் இன்னும் என் நினைவில் நிற்கின்றன.

பாவேந்தர் என்னிடம் எவ்வளவு பரிவு வைத்திருந் தார் என்பதை இக்கருத்துக்கள் உணர்த்துகின்றன.

பாவேந்தர் என்னைத் தேடி வந்தும், வேலை கொடுத் தும், பொன்னடி மூலம் தொடர்பு கொண்டும்—நான் பாவேந்தர் வீட்டுக்குச் சென்று நேரில் அவரைப் பார்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

ஒரு மாதம் கழித்து ஒருநாள் என் நண்பர் நாக முத்தையா வந்தார்.

"டே, பாரதிதாசன் சென்னைக்கு வந்திருக்கிறாராம். வா. போய்ப் பார்த்து வரலாம்,' என்று ஆவலோடு அழைத் தார்.

"பாரதிதாசன் இங்கேயே வந்திருந்தார்" என்று கூறி, குயில் அச்சிடும் செய்தியைச் சொன்னவுடன் நாகமுத்தையா மகிழ்ச்சியடைந்தார், தனக்கு முன்னதாகவே இந்தச் செய்தியைத் தெரிவிக்காததற்குக் கடிந்து கொண்டார்.

"சரி சரி புறப்படு. இன்றே போய்ப் பார்த்து வருவோம்" என்றார்.

பணியாட்களுக்கு வேலை விவரம் கூறி ஒழுங்கு செய்த பின், நாக முத்தையாவுடன் பாவேந்தரைப் பார்க்கப் புறப் பட்டேன்.

தியாகராய நகரில் பாவேந்தர் தங்கியிருக்கும் வீட்டை யடைந்தோம். பாவேந்தர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். நாக முத்தையாவை அறிமுகப்படுத்தினேன்.

"பொன்னடி!" என்று பாவேந்தர் அழைத்தார்.

பொன்னடி தேநீருடன் வந்தார். தேநீர் வழங்கியவுடன் உள்ளே சென்று விட்டார்.

"பொன்னடி எனக்கு மிக உதவியாக இருக்கிறார். என் குறிப்பறிந்து வேலை செய்கிறார், கவிதை கூட நன்றாக எழுதுகிறார்" என்று பாவேந்தர் கூறினார்.

தன்னிடம் பணிபுரிபவர் கவிஞராகவும் இருப்பது குறித்துப் பாவேந்தர் அடைந்த மகிழ்ச்சியை உணர முடிந்தது. 1947-ல் அண்ணாமலை பாவேந்தரிடம் பணி புரிந்த போது "அண்ணாமலை நன்றாகக் கவிதை எழுது கிறான்" என்று பாவேந்தர் கூறி மகிழ்ந்தது என் நினைவுக்கு வந்தது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (L I C) ஓர் அதிகாரியாக வேலை பார்த்த கவிஞர் நாகமுத்தையா பாவேந்தரிடம் நெருங்கிப் பழகினார். அடிக்கடி பாவேந்தர் வீட்டுக்குச் சென்று வந்தார்.

பல நிலைகளில் பாவேந்தர் நாக முத்தையாவுடன் கலந்து பேசி முடிவெடுக்கும் அளவுக்கு அவர் ஓர் அந்தரங்கத் தோழரும் ஆகிவிட்டார். நாகமுத்தையா பாவேந்தருக்குப் பல வகைகளில் உதவியும் இருந்தார். இடையிடையே பாவேந்தரைப் பார்க்கப் போகும்போது என்னையும் கூட அழைத்துச் செல்வார். ஒருநாள் நாக முத்தையாவுக் கென்று சிறப்பு விருந்து ஒன்றும் ஏற்பாடு செய்தார் பாவேந்தர்.

ஒருமுறை பாவேந்தர் கன்னடர் எதிர்ப்பு மாநாடு ஒன்றைக் கூட்டினார். பெங்களூரில் நடந்த திருமதி எம். எஸ். சுப்புலெட்சுமியின் இசை நிகழ்ச்சியில் புகுந்து கன்னடர்கள் கலவரம் விளைவித்ததைக் கண்டித்து இம்மாநாடு நடை பெற்றது, தமிழிசைக்குக் கன்னடர் எதிர்ப்பா? அதைக் கண்டிக்க வேண்டும் என்று பாவேந்தர் உணர்ச்சி வசப்பட் டார். இந்தக் கன்னட எதிர்ப்பு மாநாடு வாணிமகாலில் நடைபெற்றது. அதில் பல கவிஞர்களுடன் நானும் கலந்து கொண்டேன். பாவேந்தரின் உணர்வில் கலந்த நானும் மேடையேறிப் பேசினேன். பொன்னடி வீராவேசமாகப் பேசினார். அன்று பாவேந்தர் பேசிய உரையில் தமிழ் இன உணர்வு பளிச்சிட்டது. தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று பொங்கும் உணர்வுடன் பேசினார்.

தன்னைப் பின்பற்றிக் கவிதைகள் படைக்கும் நூற்றுக் கணக்கான இளைஞர்களை ஒன்றுபடுத்த எண்ணினார் பாவேந்தர். ஒன்றுபட்டால் உயர்வு கிடைக்கும் என்ற அடிப்படையில், தமிழ்க் கவிஞர் மன்றம் ஒன்று தொடங்க எண்ணினார்,

தமிழ்க் கவிஞர் மன்றம் தொடங்குவதற்கு கவிஞர் நாக முத்தையாவும், பொன்னடியானும் பாடுபட்டு உழைத் தார்கள். தலைசிறந்த கவிஞர் பெருமக்களுக்கு அழைப்பு

அனுப்பப்பட்டது. பொன்னடியும் நாக முத்தையாவும் நேரில் சென்று பலரை அழைத்தனர்.

அமைப்புக் கூட்டம் பாவேந்தர் இல்லத்தில் (இராமன் தெரு, தியாகராய நகர்) 26-1-1962அன்று நடைபெற்றது.

அமைப்புக் கூட்டத்தில் பாவேந்தர் தமிழ்க் கவிஞர் மன்றம் ஏன் தேவை என்பது பற்றி விளக்கி ஒரு சொற் பொழிவு நிகழ்த்தினார். அப்பொழுது கவிஞன் யார் என்பதற்குச் சில விளக்கங்களைக் கூறினார்.

ஒரு கவிஞன் இசைப்புலவனாகவும் இருந்தால்தான் உண்மையான கவிஞன் ஆவான் என்று கூறினார் பாவேந்தர். பாவேந்தர் நல்ல இசைப்புலமை உள்ளவர். தம் பாடல்களை அவரே நல்ல இசையில் பாடுவார். அவர் பேசும் போதுதான் குரல் கடுமையாக ஒலிக்கும். பாடும்போது மிக மென்மையாக இழைந்து கொடுக்கும். இதைக் கண்டு நான் பல முறை வியந்திருக்கிறேன். எனவே அவர் கூறிய இலக்கணத்திற்கு அவர் முற்றும் பொருந்தியிருந்தார்.

நான் எழுந்து நின்றேன். அவர் பேசும்போது குறுக்கிட்டுப் பேசினேன்.

"அப்படியானால் நான் உண்மையான கவிஞன் இல்லையா?" என்று கேட்டேன்.

"யார் அப்படிச் சொன்னார்?" என்று கேட்டார்.

"நீங்கள்தான்! இசைப்புலமை இல்லாதவன் உண்மையான கவிஞன் இல்லையென்று சொன்னீர்களே! 'எனக்கு இசைப் புலமை கிடையாது. அப்படியானால் நான் கவிஞன் அல்ல என்றுதானே ஆகிறது?"

பாவேந்தர் என்னை உற்று நோக்கினார். "நான் பொதுப்படையாகத்தான் இலக்கணம் கூறினேன். ஆனாலும் நீ கவிஞன்தான்!" என்று கூறினார்,

நான் அமர்ந்துவிட்டேன். ஆனால் இன்று நினைத்துப் பார்க்கிறேன். தான் எழுதிய பாடலைத் தானே பாடிப் பார்த்து அனுபவிக்க முடியாதவர் எப்படி முழுமையான கவிஞராக இருக்க முடியும்? பாவேந்தர் சொன்னது உண்மை தானே. இசைப் புலமையை வளர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட்டேனே என்று எண்ணுகிறேன். ஆனால் இன்று இலக்கணமே கவிதைக்குத் தேவையில்லை என்று ஒரு கூட்டம் வளர்ந்து வருவதைப் பார்க்கும் போது, பாவேந்தர் சொன்ன முழுமையான கவிஞர்களை இனி இந்த நாட்டில் பார்க்க முடியுமா என்ற ஐயமும் தோன்றுகிறது.

பாவேந்தர் முன்னிலையில் தமிழ்க் கவிஞர் மன்றத்தின் முதற் செயற்குழு அமைக்கப்பட்டது, செல்லம்மாள் பாரதி, நாரண துரைக்கண்ணன், சமதக்னி, நாகமுத்தையா, டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், தமிழழகன், வேழ வேந்தன், முருகு சுந்தரம், முகமது மைதீன், வல்லம் வெங்கடபதி ஆகியோருடன் நானும் செயற்குழு உறுப்பினரானேன்.

இறுதியில் பாவேந்தர் பொன்னடியானையும் செயற்குழு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள வற்புறுத்தினார்.

தன்னிடம் பணிபுரிபவர் என்று பாவேந்தர் தாழ்வாக எண்ணவில்லை, நல்ல கவிஞர்; அவருக்குச் சரிநிகரான இடம் தரவேண்டும் என்று முறை செய்தார். தமிழ்க் கவிஞர் மன்றத்தின் முதற் செயற்குழுவில் பாவேந்தராலேயே முன்மொழியப் பெற்ற பெருமை பொன்னடியானுக்குக் கிடைத்தது.

தான் தொடங்கிய தமிழ்க் கவிஞர் மன்றத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடியவர் இவர்தான் என்று முன்னறிந்து அவர் பொன்னடியைச் சேர்க்கச் செய்தார் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

தமிழ்க் கவிஞர் மன்றத்தைத் தொடர்ந்து செயலாள ராக இருந்து நடத்தி வரும் பொன்னடியானை எவ்வாறு போற்றினாலும் தகும். இன்பத்திலும் துன்பத்திலும் பாவேந்தரோடு இருந்து— இறுதி வரை அவர் ஊழியராகப் பணி புரிந்து, இன்றும் அவர் பெருமையை நெஞ்சில் தாங்கி நிலைநிறுத்தி வரும் பொன்னடியான் போற்றப்பட வேண்டியவர்.

இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து தமிழ்க் கவிஞர் மன்றத்தை நடத்தியும்—சற்றும் தளர்வுறாது— இன்றும் முன்போலவே ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இளமைப் பொலிவுடனும் மன்றத்தை நடத்தி வருவது கண்டு நான் வியப்படைகிறேன்.

கடற்கரைக் கவியரங்கம் இளங் கவிஞர்களின் அரங் கேற்ற மேடையாகத் திகழுகிறது. அவர் நடத்தி வரும் முல்லைச் சரம் ஏடு கவிஞர்களின் கருத்துப் பெட்டகமாகத் திகழுகிறது.

பாவேந்தரின் குயில் செய்த பணியை முல்லைச் சரம் தொடர்ந்து செய்து வருகிறது.

1947-ல் சென்னை அலுவலகம் வந்த போது என்னைக் கண்ட பாவேந்தர், என்னைப் போல் ஒரு தொண்டனின் உதவி தனக்குத் தேவை என்று எண்ணினார். நான் அவருடைய அணுக்கத் தொண்டனாக இருக்கவில்லை. அவர் விரும்பிய தொண்டனாக பொன்னடியான் விளங்கி னார். தன் பணியைச் செம்மையாகச் செய்தார். இன்றும் செய்து வருகிறார். அவர் மேன்மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.

# அவர் எழுதாத வரிகள்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

இமயத்தின் உச்சியில் ஏறிநின்று புலிக்கொடி பொறித்த தமிழன் பாடுவது போன்ற இந்தப் பாட்டுவரிகள் பாரதி தாசன் பாடியவை என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

கொலை வாளினை எடடா—மிகு
கொடியோர்செயல் அறவே!

என்ற வீரவரிகளும் புரட்சிக் கவிஞர் செய்த முழக்கமே!

மூடப்பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா இளந்தோளா

என்றும்

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமியென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு நகைத்துநீ கண்ணுறங்கு!

என்றும் தொட்டில் குழந்தையைத் தூங்கவைக்கும் போதும் தட்டி எழுப்பும் கருத்துக்களைப் பாடியவர் புரட்சிக் கவிஞர்.

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது
சிறுத்தைப் புலியே வெளியில் வா!

இளைஞர்களைக் கூவியழைக்கும் இந்த வரிகளும், எழுச்சி மிகுந்த அந்தப் பேனா முனையில் பிறந்தவைதாம்!

இருட்டறையில் உள்ளதடா உலகம்—சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!
என்று குமுறும் எரிமலையும் புரட்சிக் கவிஞர் உள்ளம் தான்!

இப்படி வீறுடன் புரட்சிக் கவிஞர் பாடல்களை எழுதினார். புரட்சிக் கவிஞர் எழுதிய சில பாடல்களை அந்தக் காலத்துத்தமிழ் இதழ்கள் பாரதியார் எழுதியதாக வெளியிட்டிருக்கின்றன. பின்னால் புரட்சிக் கவிஞர் எழுதாத சில பாடல் வரிகள் அவர் பாடல்களாக நாடு முழுவதும் வழங்கப் பட்டன.

நாடு விடுதலையை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் இளைஞர்கள் துடிப்பும் வீரமும் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.

புரட்சிக் கவிஞரின் பாடல்கள் வீறுசான்ற அவர்கள் உள்ளத்துக்கு நல்ல தீனியாகப் பயன்பட்டன. துடிக்கும் அந்த உள்ளங்களிலிருந்து வெடித்துக் கிளம்பிய வீரவரிகள் அவர் பெயராலேயே நாடு முழுவதும் வழங்கப்பட்டன. எந்த நூலிலும், எந்த நாளிதழ் மாத இதழ் வார இதழிலும் யார் பெயராலும் வெளிவராத அந்த வரிகள் எப்படி நாடெங்கும் பரவின என்பதுதான் விந்தை!

புரட்சிக் கவிஞரையே சில ஆராய்ச்சிக்காரர்கள், இந்த வரிகளை எந்த நூலிலே எந்த இடத்திலே கையாண்டிருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

தேடித் தேடிப்பார்த்துவிட்டு, எழுதியவரையே கேட்டு விடலாமே என்று நேரில் வந்து கேட்டார்கள்.

அதற்குப் புரட்சிக் கவிஞர் இவை நான் எழுதியவையல்ல என்று விடையளித்தார்கள்.

அப்படியானால் இவை யார் எழுதியவை?

எனக்குத் தெரியாது.

இப்படிப் பலர் பலமுறை புரட்சிக் கவிஞரைக் கேட்ட இந்த வரிகள் இன்னும் பலரால் அவர் எழுதியனவாகவே கருதப்படுகின்றன.

தமிழைப் பாடுகின்ற போதெல்லாம் புரட்சிக் கவிஞர் தாமே தமிழ் வடிவமாக மாறிவிடுவார் என்பது நாம் எல்லோரும் அறிந்த செய்திதான்!

தமிழே நீ ஒரு படைவீடு
நான் அங்கோர் மறவன்

என்பார்

நீ ஒரு பூக்காடு
நான் ஒரு தும்பி என்பார்
தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர்

என்பார்.

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!

என்றும்

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

என்றும் வீரம் பேசுவார்.

இனிமைத் தமிழ் மொழி எமது
எமக்கின்பம் தரும்படி வாய்த்த நல்அமுது

என்று தமிழோடு ஒன்றிக் கலந்துவிடுவார்.

சாவில் தமிழ் படித்துச்
சாகவேண்டும்—என்றன்
சாம்பல் தமிழ் மணந்து
வேக வேண்டும்

இறக்கும் போது கூடத் தமிழ் படித்துக் கொண்டே இறக்க வேண்டும் என்றும், எரித்த பிறகு மிஞ்சும் சாம்பல் கூடத் தமிழ் மணத்தோடு விளங்கவேண்டும் என்றும் புரட்சிக் கவிஞர் பாடியிருக்கக் கூடும் என்று நம்புவதில் தவறில்லை தானே!

இந்த வரிகள் புரட்சிக் கவிஞர் பாடியவை யல்ல. ஆனால் இவை அவர் பாடியதாகப் பலரால், தங்கள் கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலுந் எடுத்தாளப் படுகின்றன.

எந்நாளோ என்ற தலைப்பில் புரட்சிக் கவிஞர், தமிழர் கள் இமயமலை போல் உயர்ந்து விளங்கும் நாளை எண்ணிக் கனவு காண்கின்றார்.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரம் கொள் கூட்டம் அன்னார்
உள்ளத்தால் ஒருவரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங் கொணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும் நாள் எந்நாள் உள்ளம்
சொக்கும் நாள் எந்நாளோ?

என்றும்

நொறுக்கினார் முதுகெலும்பைத் தமிழர்கள் என்ற சேதி
குறித்த சொல் கேட்டின் பத்தில் குதிக்கும்நாள் எந்நாளோ

என்றும், இன்னும் பலப்பலவாறு தமிழர் உயர்வு குறித்துப் பாடியிருக்கிறார் புரட்சிப் பாவேந்தர்.

கடவுள் வெறி சமயவெறி
கன்னல் நிகர் தமிழுக்கு நோய் நோய் நோயே!

என்று மதவெறியைக் காண்டித்தும் பாடியிருக்கிறார், இப்படிப்பட்ட புரட்சியாளர்.

சீரங்க நாதனையும் தில்லை நடராசனையும்
பீரங்கி வைத்துப் பிளக்கும் நாள் எந்நாளோ?

என்று குமுறியிருப்பார் என்று எண்ணுவதில் தவறில்லை தானே!

நாட்டில் மூட நம்பிக்கை எந்த அளவுக்குக் கோபுரமாக வளர்ந்துவிட்டது என்று எண்ணிப் புழுங்கிய தன்மான உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய இந்த வரிகளைப் புரட்சிக் கவிஞர் எழுதாவிட்டாலும், அவர் எழுதியதாகவே நாடு நம்பிக் கொண்டிருக்கிறது.

இப்படி எத்தனையோ இளம் உள்ளங்களில் வீரத்தைப் புரட்சியை — தன்மான எண்ணத்தை — அஞ்சாமையை விதைப்பதற்கு மூலமாக இருப்பவை புரட்சிக் கவிஞரின் பாடல்கள்தாம்!

நாடு விடுதலையுற்று நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகியும், தமிழ்நாட்டில் தமிழ் இல்லை; தமிழால் முடியுமா என்று கேட்கும் ஆட்கள்தான் இருக்கிறார்கள், இவர்கள் தமிழுக்கு வந்த நோயாக இருக்கிறார்கள்,

இந்த நிலைமாற ஆயிரமாயிரம் புரட்சிக் கவிஞர்கள் தோன்ற வேண்டும்!

புரட்சிக் கவிஞர் தொடங்கிய தமிழியக்கம் வளர்ந்தோங்க வேண்டும்.

தமிழியக்கம் என்ற நூலிலே முடிவாக ஒரு கட்டளையைப் புரட்சிக் கவிஞர் தமிழ் இளைஞர் சமுதாயத்திற்குப் பிறப்பித்திருக்கிறார். அந்தக் கட்டளையைப் பின்பற்றினால் தமிழ் மீண்டும் அரியணை ஏற முடியும்.

அந்தக்கட்டளை இதுதான்.

விழிப்போரே நிலைகாண்பார் விதைப்போரே அறுத்திடுவார்
களை காண்டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார் அறிந்தோரே உயர்ந்திடுவார்
ஆதல் ஆர்வம்
செழிப்போரே,இளைஞர்களே தென்னாட்டுச் சிங்கங்காள்
எழுக! நம் தாய்
மொழிப் போரே வேண்டுவது தொடக்கம் செய்வீர்! வெல்வீர்!
மொழிப்போர் வெல்க! —பாரதிதாசன்

# பாரதியும் பாரதிதாசனும்

பல்லாண்டு பல்லாண்டாய்த் தமிழர் நாட்டில்
பாவானம் வெறும்வெளியாய் நீலம் பூத்தே
இல்லாமை நிலையெய்திக் கிடந்த போதில்
எழுகதிர்போல் பாரதியார் தோன்றி வந்தார்.
சொல்லாண்டு நாட்டுமக்கள் நெஞ்சை யாண்டு
சுடர்க்கவிகள் பலப்பலவாய்த் தோற்று வித்து
வல்லாண்மை யுணர்வெழுப்பி உரிமை வேட்கை
வளர்த்திந்தத் திருநாட்டை உயரச் செய்தார்.

வேதாந்தம் பாடுகின்ற புலவர்; தெய்வ
விளையாடல் பாடுகின்ற புலவர்; மாதர்
பாதாதி கேசங்கள், புகழ்ச்சி மாலை
பல்லிளித்துப் பாடுகின்ற புலவர், கற்றோர்
மூதேவி வளர்ப்பானார் என்று நெஞ்சம்
முறிந்திருக்கும் புலவர்பரம் பரையில் நாட்டு
மாதாவைப் பாடுகின்ற சக்தி யாக
மாவீரர் பாரதியார் தோன்றி வந்தார்.

கண்ணனையும் முருகனையும் காளியையும்
கனிந்துருகிப் பாடுகின்ற பார திக்கோ
எண்ணத்தில் நாத்திகமே குடிகொண் டுள்ள
இச்சிங்கம் எவ்வாறு தாசன் ஆனான்?

வண்ணத்துக் கவிபாடத் தெய்வ சக்தி
வளமிருக்க வேண்டுமெனும் பார திக்கு
விண்ணளவு கற்பனையை நாத்தி கத்தால்
விரித்துரைக்கும் புலவனொரு தாச னாமோ?

பாரதியார் தெய்வீகம் போற்றி னாலும்
பழமையிலே வெறுப்பு டையார்; நாடுகாக்க
வீரர்களே வேண்டுமெனும் புரட்சி நோக்கர்
வெறும்பஜனைக் கூட்டத்தை வெறுக்கும் சீலர்
தேரெனினும் விரைந்தோட வேண்டு மென்னும்
சிந்தனையில் ஞானத்தேர் உலாவந் தாராம்
யாரிவரென் றறிந்தேதான் தாச னானார்
அரட்டுகின்ற பார்வையுள்ள புரட்சி வேந்தர்.

வில்லாளி அருச்சுனனைப் பார திக்கு
மிகப்பிடிக்கும் உயர்வீரன் என்ப தாலே
சொல்லாலும் செயலாலும் வாய்மை காத்துத்
தோற்றாலும் பணியாத நெஞ்சங் கொண்ட
வல்லானாம் இராவணனைப் பாவேந்தர் தம்
வழிமுதல்வன் எனவீர வணக்கம் செய்வார்
வல்லாண்மை மிக்கஇரு கவிஞர் கட்கும்
பகைமுடிக்கும் வீரரையே மிகப் பிடிக்கும்.

புதுக்கருத்தின் விடிவெள்ளி பார திக்குப்
பொற்கதிராய்ப் பின்தோன்றும் தாசன் ஆவான்
எதிர்க்கின்ற வீரத்தால் பழமை சாடி
எழுச்சிமிகும் உலகத்தைப் படைக்கும் போக்கில்
நதிமூலம் பாரதியாம் கடலிற் கூடும்
காவிரியாம் தாசனிவன் என்ன லாகும்
குதிகொள்ளும் புதுக்கருத்தை ஏற்று நிற்கும்
கொள்கைக்கிவ் விருவருமே தலைமை யாகும்!

—நாச்சியப்பன் பாடல்கள் : தொகுதி II.